Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 27 (22.12.2003) திங்கட்கிழமை இதழ்:83

# பதவிக்காலத்தை ஒரு வருடம் நீடிப்பதற்கு சந்திரிகா முயற்சி!

## பிரதம நீதியரசருடன் இரகசியப் பேச்சு

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிப்பது தொடர்பாக பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுடன் இரகசிய மான முறையில் கடந்த வாரம் கலந்துரையாடியுள்ள தாக நம்பிக்கையான வட்டாரங்களை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவித்துள்ளன.**

இந்த சந்திப்பில் ஜனாதிபதி சந்திரிகா, அவரது முன்னால் செயலர் பாலபத்த பெண்டி மற்றும் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஆகியோர் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (10 ஆம் பக்கம் பார்க்க)



# ஆயுதத் தேவைகள் தொடர்பாக தளபதிகளுடன் ஜனாதிபதி பேச்சு!

## நாளை நடைபெறுவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

**முப்படைகளுக்கும் உடனடியாகத் தேவைப்படும், ஆயுத தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முப்படைத் தளபதிகளையும் நாளை ஜனாதிபதி மாளிகையில் சந்திக்கவுள்ளார்.**

இது தொடர்பாக, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப்படைத் தளபதி எயர்மார்ஷல் டொனால்ட் பெரேரா ஆகிய மூவரும் தமது படைகளுக்கு உடனடியாகத் தேவைப்படும், ஆயுத தளபாடங்கள்(10 ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களுக்கு இடையேயான பிளவுகள் குறித்து கதைப்பதற்கு புலிகளுக்கு அதிகாரம் இல்லையாம்!

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கிடையில் இருக்கின்ற பிளவு களைப் பற்றிக் கதைப்பதற்கு விடுதலைப் புலிகளுக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடை யாதென, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்

விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம் காங் கிரஸிற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் காலாவதியாகியுள்ள தாக, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்த கருததுத் தொடர்பாக பி.பி.சிக்கு அளித்த பேட்டியி லேயே ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முஸ்லிம்களுக்கிடையில் இருக்கின்ற பிளவுகள் பற்றிக் கதைப்பதற்கு புலிகளுக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. அதைப் பற்றி சொல்லி அவர்கள் தங்கள் பொறுப்புக் களிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியாது.

எங்களுக்குள்ளே இருக்கின்ற பிளவுகளை களைவதற்கு நாங்கள் சந்தித்துப் பேசுவதற்கு தயாராக இருக்கின்றோம். இதுதொடர்பாக அவர்கள் இப்படிக் கூறுவது அழகல்ல.

இந்த விடயம் குறித்து விடுதலைப் புலி களின் தலைவருக்கு கடிதம் எழுத எண்ணி யுள்ளேன். ஏற்கனவே இது சம்பந்தமாக கடி தங்கள் பரிமாறிக்கொண்டிருக்கிறோம் என்றும் ஹக்கீம் பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

## தற்போதைய நிலைமை குறித்து நோர்வே தூதரகம் அறிக்கை!

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக, கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் விரிவான அறிக்கை ஒன்றை ஒஸ்லோவிற்கு அனுப்பிவைத்துள்ளது.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தின் செயலாளர் தோமஸ் கைன்லண்ட் இந்த அறிக் கையைத் தயாரித்து அனுப்பி வைத்துள்ள தாகத் தெரியவருகிறது. இவர் கடந்த வாரம் வடபகுதிக்கு விஜயத்தை மேற்கொண்ட பின் னரே இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளார்.

இதேவேளை, இவர் கிளிநொச்சியில் வைத்து புலிகளின் சமாதான செயலகப் பணிப் பாளர் புலித்தேவனையும் சந்தித்து உரையாடி யிருந்தார். இவரது இந்த அறிக்கை நோர்வே யின் அடுத்த கட்டச் செயற்பாடுகள் குறித்த நட வடிக்கைக்கு உதவும் எனத் தெரியவருகிறது.

# மலிக் – மனோ பேச்சு ஒத்திவைப்பு; அரசியல் மாற்று மூலோபாயமாம்!

## ஜனாதிபதி சந்திரிகாவை சாடுகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

மனோதித்தவெல - மலிக்சமர விக்கிரம குழுவினரின் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த் தையை அடுத்த மாதம் ஒத்திவைத்ததன் மூலம், ஜே.வி.பியுடனான கூட்டு உடன்படிக் கையை ஜனாதிபதி ஒத்திவைத்துள்ளார் என குற்றஞ்சாட்டியுள்ள ஜே.வி.பி.,

இந்த குழுவினரின் பேச்சு வார்த்தையை ஜனவரி மாதத்தடன் நிறுத்தி தம்முடன் சுதந் திரக் கட்சி ஒப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டு மெனவும் கேட்டுள்ளது.

மலிக் - மனோ குழுவினரின் அடுத்த மாத பேச்சுவார்த்தையின் பெறுபேற்றுக்காக சுதந் திரக்கட்சி காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை, ஜே.வி.பியின் தலைமைப்பீடம் இந்த பேச்சுவார்த்தை ஒரு ஆரம்பக் கட்டமல்ல எனவும், அரசியல் மூலோபாயத்திற்கான மாற்று வழியாக ஜனாதிபதி செயற்படுகின்றார் என வும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, லங்கா சமாசமாஜக் கட்சியின் செயலாளர் பட்டி வீரக்கோன் தெரி விக்கையில், ஜே.வி.பியுடன் சுதந்திரக் கட்சி இதுவரை கூட்டணி ஏற்படுத்தாமைக்கு கார ணம் நடைமுறைப் பிரச்சினைகள்தான்.

சுதந்திரக் கட்சியுடனான ஜே.வி.பியின் கூட்டில் ஜனாதிபதி சந்திரிகா முரண்பாடான விதத்தில் தனது கருத்துக்களை வெளிப் படுத்துகின்றார். எமது கட்சியை பொறுத்த வரையில் ஜே.வி.பியுடனான கூட்டுத் தொடர் பில் ஜனாதிபதியின் பொறுப்பற்ற தன்மை, கவனத்தில் எடுக்காமை, காரணமாகவே சுதந் திரக் கட்சி ஜே.வி.பியிடன் கூட்டணியை உரு வாக்கவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதான தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து நாடாளுமன்றில் பேரினவாதத்தை எதிர்க்கும்

## கிளிநொச்சியில் மனோ கணேசன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

நான்கு பிரதான தமிழ்க்கட்சிகளும் ஒன்று சேர்ந்து சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக நாடாளுமன்றில் குரல்கொடுக்கவுள்ளோம் என மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணே சன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்றுச் சந்தித்து உரையாடிய மனோ கணே சன், சந்திப்பின் முடிவில் செய்தியாளர்களிடம் உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

கொழும்பு மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் குறித்து இன்று தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பில் ஆராய்ந் தோம்.

மேல் மாகாணத்தில் வாழ்ந்து கொண்டி ருக்கும் தமிழ் மக்களுக்குச் சார்பாக மலை யக மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல் வடக்கு - கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களும் கொழும்பில் ஏராளமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றே. மலை யகத்தமிழர், கொழும்புத தமிழர், வடக்கு - கிழக்கு தமிழர் என எம்மைப் பிரித்துப் பார்க்க முடியாது. குறிப்பாக அனைவரும் தமிழர்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ஜப்பானியத் தூதுவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

இலங்கைக்கான புதிய ஜப்பானியத் தூது வர் ஆசியோ சூடா, ஜப்பானியத் தூதரகத் தின் மூன்றாவது செயலாளர் கிச்சிறோ சூடா ஆகியோர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று கிளிநொச்சியில் காலை பத்து மணிக்கு சந்திக்கவுள்ளனர்.

இன்று காலை விமானப்படையின் ஹெலி கொப்ரர் மூலம் கிளிநொச்சி வரும் இவர்கள் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் செயலகத்தில் இச்சந்திப்பினை மேற்கொள்ள வுள்ளனர். இதன்பின் கிளிநொச்சி வைத்திய சாலை மற்றும் கிளிநொச்சியிலுள்ள யு.என். எச்.சி.ஆர். அலுவலகம் ஆகியவற்றுக்கும் செல்லவுள்ளனர். பின்னர் ஏ-9 தரைப்பாதை யூடாக இவர்கள் வவுனியா செல்லவுள்ளனர்.

# நாடாளுமன்றைக் கலைத்தாலே சுதந்திரக்கட்சியுடன் கூட்டணி!

## மக்கள் விடுதலை முன்னணி அறிவிப்பு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடா ளுமன்றத்தைக் கலைத்தால் மட்டுமே - இனி வரும் காலங்களில் சுதந்திரக்கட்சியுடன் கூட் டணி ஏற்படுத்தப்படுமென ஜே.வி.பி தெரிவித் துள்ளது.

இரண்டு கட்சிகளும் தேர்தலுக்கு முதல் கூட்டணியை அமைப்பதில் ஆர்வமாக உள் ளன. ஆனால், நாடாளுமன்றத்தைக் கலைப் பதற்கு ஜனாதிபதி தற்போது தடையாக உள் ளார். இதற்குக் காரணம் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் மூலம் தனது நிலை யைத் தெரிந்த பின்னரே - ஜே.வி.பியுடனான கூட்டணியை உருவாக்குவதில் ஜனாதிபதி முனைப்பாக உள்ளார்.

ஆனால், தற்போதைய அரசியல் நெருக் கடி நிலை தொடருவதை ஜே.வி.பி விரும்ப வில்லை எனவும், சுதந்திரக்கட்சி எந்தப் பாதை யைத் தேர்ந்தெடுப்பதென்பதை அவர்களே தீர்மானிக்கவேண்டும் எனவும் ஜே.வி.பி தெரி வித்துள்ளது.

அத்துடன், மக்களுக்கு இன்று தேவைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் டெங்கு நோய்; 4 பேர் இனங்காணப்பட்டனர்!

(வவுனியா)

கடந்த ஒரு வாரகாலத்திற்குள் வவுனியா மாவட்டத்தில் நான்கு பேர் டெங்குக் காய்ச்ச லென இனங்காணப்பட்ட நிலையிலும், பத்து பேர் டெங்குக் காய்ச்சல் அறிகுறிகளுடனும் வவுனியா பொதுவைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக வவுனியா மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன் 'நமது ஈழநாடு'க்குத் தெரிவித்தார்.

தென்பகுதியிலிருந்து வவுனியாவுக்கு வருபவர்களாலேயே வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோய் ஏற்பட்டுள்ளதெனத் தெரிவித்தார்.

இந்த நோய் பரவுவதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளைத் தாம் தற்போது மேற் கொள்கின்றபோதும், இதற்குப் பொதுமக் களின் ஒத்துழைப்பே மிக முக்கியமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (03)



மனம் விரும்பும் விலையில் 21 அங்குல T.V

ரூபா 20, 450/- சிங்கரில் மட்டுமே. SINGER

NO.1 Stanley Road, Jaffna

Tel 021-222 5408

# இந்தியப் படைக்கு நினைவுத்தூபி அமைப்பதை ஈழத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்!

## யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அமைதிப்படை என்ற போர்வையில் இந்திய இராணுவம் வடக்கு-கிழக்கில் நிறுத்தப்பட்டபோது, உயிரிழந்த படையினருக்கு நினைவுத் தூபி அமைக்க இலங்கை இராணுவம் எடுத்துள்ள முயற்சியை யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதுடன் கடும் ஆட்சேபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றது.

இந்திய இராணுவம் இலங்கையின் வடக்கு - கிழக்கை ஆக்கிரமித்தபோது, விடுதலைக்கு பேராபத்து ஏற்பட்டதும் - அப்பாவிப் பொதுமக்கள் கொன்று குவிக்கப்பட்டதும், இளைஞர்கள், யுவதிகள் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்டதும், சித்திரவதைகள் இடம்பெற்றதும் பல்வேறு கொடூரங்கள் இடம்பெற்றதும், இன்னும் எம்மக்கள் நெஞ்சங்களில் இருந்து மறைந்துவிடவில்லை. கறை படிந்த அந்த வரலாறுக் காலத்தை எண்ணி எம்மக்கள் வேதனையும், கவலையும் அடைந்துள்ளனர்.

விடுதலைக்காக இரத்தம் சிந்தி உயிர்த்தியாகம் செய்த ஈழத்துத் தமிழர்கள் இந்தியப் படையின் வருகை மூலம் தங்கள் வாழ்வியலில் மிக மோசமான தாக்கங்களை எதிர்கொண்டார்கள் அத்தகைய இந்தியப்படைக்கு நினைவுத்தூபி அமைக்க இலங்கை இராணுவம் முயல்வதை ஈழத் தமிழர் கடைசிவரை எதிர்ப்பார்கள் இவ்வாறான திட்டத்தை சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் கைவிட்டுவிடவேண்டும் என்பதே எமது அவா.

இந்திய அரசு சிக்கலான, நடைமுறைச்சாத்தியப்படாத விடயங்களில் உள்நுழைவதை விடுத்து, சிங்கள ஆட்சியாளர்களால், காலம் காலமாக நசுக்கப்படும் ஈழத் தமிழர்களின் இன்னல்களை களைய இந்தியப் பிரதமர் உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென எதிர்பார்க்கின்றோம். அதுவே கொந்தளிப்புடன் இருக்கும் எமது மக்களின் மன உணர்வுகளை சாந்தப்படுத்தும் என்பதை அனைவருக்கும் உணர்த்துகின்றோம்.

## நகைகள் திருட்டு

(வண்ணை)

யாழ்.நகருக்கு அண்மித்த இராசாவின் தோட்டப் பகுதியில் கடந்த வெள்ளி இரவு வீடு ஒன்றில் சுமார் 20 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

இது குறித்து, வீட்டின் உரிமையாளரால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (111)

# ஆசிரியர் சங்க கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிப்பு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால், ஒழுங்குபடுத்தப்பட்டு நாளை காலை 9 மணிக்கு இடம் பெறவிருந்த ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கு யாழ்.இராமநாதன் கல்லூரியிலும், கிளி.மகா வித்தியாலயத்திலும் இடம்பெறவிருந்தது. எனினும் நாளை கல்வி அமைச்சர் சகல ஆசிரியர் தொழிற் சங்கங்களையும் கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைத்திருப்பதால், தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் உட்பட பல முக்கிய நிர்வாகிகள் இதில் கலந்துகொள்ளும் பொருட்டு அங்கு செல்கின்றனர்.

இதனாலேயே இந்தச் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கு மீண்டும் இடம்பெறவுள்ளமை தொடர்பாகப் பின்னர் அறிவிக்கப்படும் எனவும், தற்போது பிற்போடப்பட்டமையால் ஏற்படக்கூடிய சிரமங்களுக்கு வருத்தத்தினைத் தெரிவித்துக் கொள்வதாகவும் பொதுச்செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - இன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வடமராட்சி வலய ஆசிரியர்களுக்கு நடைபெறவிருந்த கருத்தரங்கு திட்டமிட்டபடி நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.


**பண்டிகைக்கால சலுகை**
**ஜனவரி 15 ஆம் திகதி வரை மட்டுமே**

சக்தி F.M. இல் உங்கள் வாடிக்கையாளருக்கு நத்தார், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள ரூபா 3500.00 மட்டுமே

விபரங்களுக்கும், தொடர்புகளுக்கும்
சக்தி F.M., சக்தி T.V. யின் அங்கீகரிக்கப்பட்ட யாழ்.முகவர்

**ஜோ.எகட்டன் செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.இல. - 222 7227
தொ.நகல் - 222 7227
அதிரடி தொ.பே. - 0777032188

சக்தி T.V. சக்தி F.M முகவர்கள்
பிரத்தியேக விளம்பரதாரரும், வீடியோ விளம்பர படப்பிடிப்பாளர்களும்
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி
**P.T.தேவா**
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
தொ.பே.07776143541
(சி-1903)



**திறஞ்சனாஸ்** சங்கானை
இன்று முதல்
ஸ்ரீகாந், சினேகா நடித்த
**பார்த்திபன் கனவு**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
**JOHNNY ENGLISH**
(சி-1846)



**ராஜா** யாழ்ப்பாணம்.
தருண், த்ரிஷா, விவேக்,
மணிவண்ணன் நடித்த
**எனக்கு 20 உனக்கு 18**
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1847)



**அருள்வளர் சுந்தர ஆஞ்சநேய ஜெயந்தி விழா**

**இணுவில் - மருதனார்மடம்**

காலம்: 23.12.2003 செவ்வாய்க்கிழமை காலை 7 மணிமுதல் பொங்கல் விழா நடைபெறும்.
காலை 7 மணிக்கு 108 கலச அபிஷேகமும்
காலை 10 மணிக்கு விசேட சொற்பொழிவு
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
மதியம் 12 மணிக்கு விசேட பூசை பி.ப.1 மணிக்கு
மகேஸ்வர பூசை (அன்னதானம்)
மாலை 5 மணிக்கு விசேட பூசை
மாலை 6 மணிக்கு தெய்வீக இசையரங்கு
பாட்டு : சங்கீத பூஷணம் க.இராமநாத சர்மா
வயலின்: உ.இராதாகிருஷ்ணன
மிருதங்கம்: எஸ்.துரைராஜா

அனைவரும் வருகைதந்து அருள்பெறுக

ஆதீன கர்த்தா,
இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்
(சி-1915)



**2004 - புதிய ஆண்டை வானலையில் சந்திப்போம்**

**எதிர்வரும் 31 ஆம் நாள் இரவு 11 மணி தொடக்கம்**
**2004 முதல் நாள் இரவு 10 மணிவரை....**



வர்த்தகப் பெருமக்களின் விளம்பர ஆதரவுடன்
**புலிகளின்குரலின் தமிழீழவானொலி...**
- உலகத்தின் 05 தமிழ் வானொலிகள்
- 02 இணையத் தளங்களுடன் இணைந்து

நேயர்களே உங்கள் வாழ்த்துக்கள்
உலகின் மூலைமுடுக்கெங்கும்
உங்கள் உறவுகளுக்குச் சென்றடையும் வகையில்
சிறப்பு ஒலிபரப்பை வழங்க இருக்கின்றது.

புத்தாண்டை புலிகளின் குரலின்
தமிழீழ வானொலியின்
வான் அலையில்
வரவேற்போம்.
உறவுகளை வாழ்த்துவோம்.

**எதிர்வரும் 31 ஆம் நாள் இரவு 11 மணிக்கு**
**புத்தாண்டின் பூரிப்பில் சந்திப்போம்.**

**புலிகளின்குரலின் தமிழீழவானொலி,**
நடுவப்பணியகம் - முதன்மைச்சாலை,
கிளிநொச்சி - தமிழீழம்.
(சி-1913)

# இஸ்லாமிய உரிமைக்கான அமைப்பு
# தமிழ்ச்செல்வனைச் சந்திக்க நடவடிக்கை



(கொழும்பு)

இஸ்லாமியர் உரிமைக்கான வடக்கு முன்னணி - வடக்கு முஸ்லிம்களின் அரசியல், பொருளாதார, பாதுகாப்பு உரிமைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக - விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை சந்தித்துப் பேசுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இந்த சந்திப்பை ஏற்பாடு குறித்து இந்த முன்னணியின் செயலாளர் நாயகம் முல்லை வேந்தன் தகவல் வெளியிடுகையில் -

வடக்கு முஸ்லிம்கள் - வடக்குத் தமிழர்களோடு சகோதரர்களாகத் தொடர்ந்தும் வாழ வேண்டும் என்பதற்காகவும் - தங்களது அனைத்துப் பிரச்சினைகளையும் விடுதலைப் புலிகளுடன் பேசித்தீர்த்து, தங்களது தாயகத்தில் நிரந்தரமாக மீளக்குடியமர்ந்து சகவாழ்வு வாழவேண்டும் என்கின்ற அபிலாஷைகளையும், எதிர்பார்ப்புக்களையும் உணர்ந்த இஸ்லாமியர் உரிமைக்கான வடக்கு முன்னணி - விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை நடத்த ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

கடந்த பதின்மூன்று வருடங்களுக்கு மேலாக பேரினவாத அரசுகளாலும், இப்பேரினவாத அரசுகளுக்கு சாமரை வீசிய முஸ்லிம் அரசியல்வாதிகளினாலும், அரசியல் பொருளாதார உரிமைகளை மறுக்கப்பட்ட ஒரு சமுதாயமாக ஆக்கப்பட்டோம். தொடர்ந்தும் அரசியல் பகடைக் காய்களாக முஸ்லிம் இன அரசியல் வாதிகளினால் ஆக்கப்பட்டு வருவதனால் கேள்விக்குரியதான வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டிய நிலைக்கு, வடக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் இவ்வாறான அரசியல்வாதிகளை நம்பாது, தங்களது அரசியல் பொருளாதார பாதுகாப்பு உரிமைகளை சம்பந்தப்பட்ட தரப்பான விடுதலைப் புலிகளுடன் பேசித் தீர்த்து, மீளவும் தங்களது தாயகத்தில் நிரந்தர நிம்மதியுடன் வாழவே ஆசைப்படுகின்றனர்.

இதை மையமாகக் கொண்டு, இஸ்லாமியர் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இஸ்லாமியர் உரிமைக்கான வடக்கு முன்னணி - வடக்கு முஸ்லிம்களின் நீண்டகால அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புக்களையும், விடுதலைப் புலிகளுடன் மனம்திறந்து பேசித்தீர்க்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச் சந்திப்பு வடக்கு முஸ்லிம் தமிழர்களின் ஒற்றுமைக்கு ஒரு பாலமாக அமைவதுடன் அரசியலில் ஒரு திருப்பு முனையையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இஸ்லாமியர் உரிமைக்கான வடக்கு முன்னணி விடுதலைப் புலிகளுடன் பேசுவது சரித்திர முக்கியத்துவம் பெறும் என்பதும் உண்மையே. வட மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக இருபதுபேர் கொண்டகுழு, விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திருமலை மாவட்டத்தில்
## காணி அமைச்சின் நடமாடும் சேவை; விடுதலைப் புலிகள் கண்டனம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் - காணி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடமாடும் சேவையை விடுதலைப் புலிகள் கண்டித்துள்ளனர்.

இதுகுறித்து, விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறையினர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு எதனையும் காண முயலாது, அரசாங்கம் இத்தகைய சேவைகளை நடாத்த முயல்வது பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கிவிடுமென அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் காணி அமைச்சு இத்தகைய நடமாடும் சேவைகளை நடாத்தும் போது, தமிழர்களுடைய பல பாரம்பரிய பிரதேசங்கள் பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்படுமென இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இத்தகைய செயற்பாடுகளை அரசு உடனடியாக நிறுத்தவேண்டுமென, விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறையினர் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## கொமன்வெல்த் செயலாளர் பதவிக்கு
# கதிர்காமரைப் போட்டியிடத் தூண்டியதாக வெளியான செய்திக்கு பிரிட்டன் மறுப்பு!



(லண்டன்)

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பதவிக்குப் போட்டியிடுமாறு -இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை பிரித்தானியாவே தூணடியதாக வெளியான செய்திகளை, அந்த நாடு மறுத்திருக்கிறது.

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பதவிக்கு இரண்டாவது தடவையாகவும், டொன் மக்கினனை நியமிப்பதில் தாங்கள் உறுதியாக இருந்ததாகவும், இந்த விவகாரம் தொடர்பில் நவம்பர் மாதத்திலோ அன்றி வேறு எந்தவொரு சந்தர்ப்பத்திலோ லக்ஷ்மன் கதிர்காமருடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றும், பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சு மற்றும் பொதுநலவாய அலுவலகத்திற்கான ஊடக அலுவலகம் தெரிவித்திருக்கிறது.

டொன் மக்கினன் இரண்டாவது தடவையாகவும் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பதவிக்கு போட்டியிடுவதற்கான பிரித்தானியாவின் ஆதரவை கடந்த 27 ஆம திகதியன்று, பிரதமர் ரொனி பிளேயர்- நியூசிலாந்து பிரதமருக்கு எழுத்து மூலம் உறுதி செய்திருந்ததாகவும், ஊடக அலுவலக அதிகாரியான கிறிஸ்டியன் சாப்லஸ் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதுவர் கூட, நவம்பர் 27 ஆம் திகதியன்று இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், டொன் மக்கினனுக்கே தமது ஆதரவு என்று கூறியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

# மங்களவுக்கு விசா வழங்க பிரிட்டன் தூதரகம் பின்னடிப்பு!

பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவுக்கு - பிரிட்டன் செல்வதற்கு விசா வழங்க பிரித்தானியத் தூதரகம் தாமதித்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டன் விசாவுக்கு விண்ணப்பிப்பிப்போரின் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யமுடிவு செய்யப்பட்டிருந்தமைக்கு எதிராக, உயர் நீதிமன்றத்தில் - மங்கள சமரவீர வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இதன் காரணமாகவே அவருக்கு விசா வழங்க பிரிட்டன் தூதரகம் பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பிரிட்டன் தூதரகம் விசா வழங்குவதுடன், மங்கள சமரவீர அடிக்கடி அங்கு சென்று வருபவராகவும் இருந்துவருகிறார். இந்தநிலையிலேயே இவருக்கு விசா வழங்க இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 25 வருடமாகப் பிரிட்டனுக்குத் தான் சென்றுவருவதாகக் குறிபபிட்ட மங்கள சமரவீர - தமது செயலாளர்களை அனுப்பியே விசா பெற்றுவந்ததாகவும குறிப்பிட்டார்.

கடந்த திங்கட்கிழமை பிரிட்டன் தூதரகத்துக்கு விசா பெறச்சென்ற தமது செயலாளரை, வியாழக்கிழமை வருமாறு அதிகாரிகள் கூறியதாகவும், வெள்ளிக்கிழமை அவர் சென்றபோது, விசா வழங்கும் பிரிவு மூடப்பட்டிருந்ததாகவும் திங்கட்கிழமை வருமாறு கூறப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

விசா விண்ணப்பம் தொடர்பான நேர்முகப் பரீட்சைக்கு மங்கள சமரவீரவை பிரிட்டன் தூதரகத்துக்கு வருமாறு அழைப்புவிடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரிட்டன் தூதரகத்துக்குச் சென்று, விசா பெறுவது சிக்கலானதல்ல. ஆனால், விசா வழங்க பிரிட்டன் தூதரக அதிகாரிகள் பின்னடிப்பதற்கு - உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கே காரணம் என்று மங்கள சமரவீர தெரிவித்தார்.

# புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வர்த்தக சம்மேளனம் கோரிக்கை!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு, இலங்கையின் இணைந்த வர்த்தக சம்மேளனம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கடந்த வெள்ளியன்று இணைந்த வர்த்தக சம்மேளனம் சந்தித்த போதே, இந்தக் கோரிக்கையை பிரதமரிடம் விடுத்துள்ளது.

தற்போது காணப்படும் அரசியல் சர்ச்சை உதவி வழங்கும் நாடுகளின் நம்பிக்கையை பாதித்துள்ளதாக இந்தச் சந்திப்பின் போது பிரதமரிடம் வலியுறுத்திய அவர்கள் - நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இது அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, அரசாங்கமும், ஜனாதிபதியும் தமக்கிடையிலான வேறுபாடுகளுக்குத் தீர்வு கண்டு, இணக்கப்பாட்டு அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்று பிரதமரிடம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இலங்கையை மீட்டெடுத்தல் என்கின்ற செயற்பாட்டுக்கு சமாதான முயற்சிகள் மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியம். இதன்மூலமே டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது, ஜனாதிபதியுடனான முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகள் குறித்து வர்த்தக சமூகத்தினருக்கு விரிவாக விளக்கிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக நான்கு பேர் கொண்ட குழு மேற்கொண்டு வரும் முயற்சிகள் பற்றியும் விபரித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால், பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி அரசாங்கத்திடம் மீளவும் கையளிக்க வேண்டியது அவசியம் என்றும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடன் பேசுவதானால், அவர்களிடம் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புக்கள் இருக்க வேணடியது அவசியம் என விடுதலைப் புலிகளும் வலியுறுத்தியுள்ளதாகக் கூறினார்.

எவ்வாறாயினும், தற்போதைய நிலையில் நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்து செல்வதாக எச்சரித்த வர்த்தக சமூகத்தினர், இதனால் பொதுச்சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், செயலற்ற தன்மையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும் முதலீட்டாளர்களும், தனியார் துறையினரும் காத்திருந்து பார்த்தல் என்கின்ற கொள்கையைக் கடைப்பிடிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்ததாக சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட முன்னணி வர்த்தகப் பிரமுகர் ஒருவர், இன்னமும் அரசியல் முரண்பாட்டு நிலைமை நீடிப்பதை சந்திப்பின் போது தம்மால் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்ததாகவும் குறிப்பிட்டார்.

புதிய ஆண்டுடன் இந்தச் சர்ச்சைக்கு ஒரு முடிவு காணப்பட்டு மக்களுக்கு நல்லதொரு செய்தியை இவர்கள் தரவேண்டும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும தெரிவித்தார்.

இதேபோன்றதொரு சந்திப்பை ஜனாதிபதியுடனும் அடுத்த வாரம் மேற்கொள்ளவுள்ள இணைந்த வர்த்தக சம்மேளனத்தினர் - இந்தச் சர்ச்சைகளுக்குத் தீர்வு காண்பதில் வர்த்தக சமூகத்தினர் ஆற்றக்கூடிய பங்களிப்புக் குறித்து மீண்டும் ஆராயவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னரும் வளங்களைப் பயன்படுத்தமுடியாதநிலை
### மன்னார் பொது அமைப்புகள் மகஜர்

(மன்னார்)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும், தமது பிரதேசத்தில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். இதனால் - பனை, கடல் வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படமுடியாமல் உள்ளதாக - மன்னார் பிரதேச பொது அமைப்புக்கள் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளன.

நேற்றுமுன்தினம் தமது மகஜரை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், மன்னார் மறை மாவட்ட ஆயர், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் ஆகியோரிடம் ஒப்படைத்தனர்.

இந்த மனுவில் - தலைமன்னார் மக்கள் கடல்வளத்தினையும், பனை வளத்தினையும் கொண்டு தமது வாழ்க்கையினை நடத்திவருகின்றனர். யுத்தகாலத்தில் பாதிப்படைந்த எமது மக்கள், தற்போது ஓரளவு முன்னேறிவருகின்ற நிலையிலும், இவ்வாறு கடற்படையினர் தமது நிலைகளை பலப்படுத்தி வருகின்ற செயற்பாடு, மக்களின் அமைதி வாழ்க்கையையும், பொருளாதாரத்தினையும் பெரிதும் பாதிக்கின்றது.

பரம்பரை பரம்பரையாகக் கடல் வளத்தினையும், மீன்பிடியையும் நம்பியிருக்கும் மக்கள் - துன்பங்களை எதிர்நோக்க நேரிடுகின்றது. எனவே, ஆக்கிரமிப்பு நடவடிக்கையை உடனடியாகத் நிறுத்த வேண்டுமென அவர்கள் தமது மகஜரில் தெரிவித்துள்ளனர்.

# பொலிஸ்மா அதிபர் இன்று பதவியேற்பு!

(கொழும்பு)

28 ஆவது பொலிஸ்மா அதிபராக - இந்திர டி சில்வா இன்று பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார்.

1971 ஆம் ஆண்டு பொலிஸ் சேவையில் இணைந்த இவர் - உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடமையாற்றினார். பொலிஸ் அத்தியகட்சராக நியமிக்கப்பட் பின்னர் - வவுனியாவிலும், பொலிஸ் தலைமையகத்தில் உயர் பயிற்சி இயங்குநராகவும் பதவி வகித்துவந்தார்.

2000 ஆம் ஆண்டு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவியிலிருந்த இந்திர டி சில்வா - ஊவா மாகாணத்திலும், மேல்மாகாணத்தின் தெற்குப்பகுதியிலும், சப்ரகமுவ மாகாணத்திலும் நிர்வாகப் பிரிவுக்கு பொறுப்பாளராகக் கடமையாற்றினார்.

கலைப் பட்டதாரியான இவர் - இலங்கை மன்றக்கல்லூரியின் விரிவுரையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சுகாதார ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவிப்பு

(கொழும்பு)

சுகாதார சேவை ஊழியர்கள் முன்னறிவித்தலின்றி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

சம்பள முரண்பாடுகளை நீக்கக் கோரியே, இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

இரண்டு தினங்களுக்குள் சம்பள முரண்பாட்டை நீக்காவிட்டால் - வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும், சுகாதார அமைச்சுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(01)

## இந்திய-இலங்கை கப்பல் சேவை மீள ஆரம்பிப்பதில் தாமதம்!

(சென்னை)

இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையில் மீள ஆரம்பிக்கப்படவிருந்த கப்பல் சேவை தாமதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான கப்பல் சேவை தாமதமடைவதற்கு ஒப்பந்தகாரர்களால் கப்பலைப் பெற்றுக்கொள்ளமுடியாமையே காரணம் ஆகும்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இரு நாடுகளுக்கும் இடையிலான கப்பல் சேவை தடைப்பட்டிருந்தது. தற்போது புலிகளுக்கும், அரசுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர், மீண்டும் கப்பல்சேவையை நடத்த தீர்மானிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சேதமடைந்துள்ள வல்லைப்பாலத்தில் வாகன விபத்துகள் ஏற்படும் அபாயம்

வடமராட்சிக்கும், வலிகாமப் பகுதிக்கும் இடையிலான ஒரேயொரு போக்குவரத்துப் பாதையான வல்லைப்பாலம் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளதால் - இதனூடாகப் பிரயாணத்தை மேற்கொள்ளும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

1995 ஆம் ஆண்டு இராணுவத்தினரின் - ஷெல் தாக்குதல்களால் பலத்த சேதமாக்கப்பட்ட இந்தப் பாலம், பின்னர் தற்காலிகமாகச் செப்பனிடப்பட்டது.

மிகவும் மோசமாகச் சேதமுற்று இடிந்துவிடும்நிலையில் இருந்த இந்தப் பாலம், 2000 ஆம் ஆண்டு தற்காலிகமாகப் பனங்குற்றி கள், மண்மூட்டைகள் கொண்டு திருத்தப்பட்டது. இந்தத் தற்காலிக திருத்தத்திற்குப் பல இலட்சம் ரூபா செலவிடப்பட்டது.

முற்றாக இடித்துப் புனரமைக்க வேண்டிநிலையில் இருந்தபோதும், இந்தப் பாலத்தை திருத்த நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால், தற்காலிகமாகப் புனரமைக்கப்பட்டது.

ஆனால் இந்தப் பாலம் படிப்படியாகச் சேதமுற்று, இப்போது மிகவும் மோசமானநிலையை அடைந்திருக்கிறது.

பாலத்தில் - ஆங்காங்கே பல குழிகள் தோன்றி, அவை பாரிய துவாரங்களாகிவிட்டன. நான்கு பாரிய துவாரங்கள் இரும்பு சட்டங்களால் மூடப்பட்டிருக்கிறபோதும், மேலும் பல துவாரங்கள் ஏற்பட்டு வருகின்றன.

அந்தப் பாலத்தில் படையினரின் பல காவலரண்கள் இருப்பதாலும், பாலம் சேதமடைந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, இந்தப் பாலத்தை முழுமையாகத் திருத்தியமைப்பதற்கோ, அன்றி சேதமடைந்துவரும் இந்தப் பாலததில் நீர்வழிந்தோடுவதற்கான வடிகாலமைப்பு வசதிகளைச் செய்துகொள்ளவோ, வீதி அபிவிருத்தி அதிகாரிகள் போதிய நடவடிக்கை எடுக்கவில்லையென பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், வல்லைப் பாலத்துக்கு அண்மையாக - வீதியோரத்தில் வளர்ந்துள்ள முட்செடிகள்- வீதியை ஆக்கிரமித்து வருவதால், இந்த வீதியினூடாகப் பயணம்செய்வோர் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# நகரில் நடைபாதை வியாபாரிகள் முறுகல்

நகரில் நடைபாதை வியாபாரிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் முறுகல் நிலையொன்று ஏற்பட்டது. பின்னர் பொலிஸார் தலையிட்டதையடுத்து, இந்த முறுகல்நிலை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதுவருடத்தை முன்னிட்டு கடைகளை அமைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையே, இந்த முறுகல் நிலைக்கு காரணமெனக் கூறப்படுகிறது. பண்டிகைக் காலம் ஆரம்பித்துள்ளமையால், நடைபாதை வியாபாரிகளின் எண்ணிக்கையும் தற்போது அதிகரித்து காணப்படுகிறது. இதனால் கடைகளை அமைப்பதிலே இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

வீதியோரமாகப் போக்குவரத்தை தடைசெய்யும் விதத்திலே அமைக்கப்பட்டிருந்த ஒரு சில நடைபாதைக கடைகள் - பொலிஸாரால் அகற்றப்பட்டுள்ளது. இதேவேளை, நவீன சந்தைக்கு முன்புறமாகப் பழவியாபாரிகள் சிலர் சட்டவிரோதமான முறையிலே நடைபாதை வியாபாரத்திலே ஈடுபட்டு வருவதாகவும், இவர்களுக்கு மாநகரசபையால் பல தடவை எச்சரிக்கை விடப்படும், எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

# இளைஞர் யுவதிகளுக்கு திரைக்கலைசார் பயிற்சிநெறி

## சலனசித்திர அமைப்பு ஏற்பாடு

சனசமூக நிலையங்களுக்கூடாக இளைஞர், யுவதிகளுக்கு நிரந்தர சுயதொழில் வாய்ப்பை உருவாக்கித்தரும் வகையில், ஒருவாரகால திரைக்கலைசார் இலவசப்பயிற்சி நெறி ஒன்றை - மாவட்ட திரைக்கலைச்சார் சங்கங்களின் சம்மேளமான "சலன சித்திரம்" நடத்தவுள்ளது.

இதற்காக ஒவ்வொரு சனசமூக நிலையத்திலிருந்தும் மூவர் வீதம் பயிற்சியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

இதில் இணைந்துகொள்ள விரும்புவோர், தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை - சனசமூகநிலையத் தலைவர் அல்லது செயலாளரின் சிபாரிசுடன், அனுப்ப வேண்டிய முகவரி - சலனசித்திரம் கொடிகாமம் வீதி, கரவெட்டி. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# நடைபாதை சோதிடர்கள் பொலிஸாரால் அகற்றப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

ஆஸ்பத்திரி வீதியில் நடைபாதையோரமாகச் சோதிடம் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் - பொலிஸாரால் அப்புறப்படுத்தப்பட்டனர். இதுவரைகாலமும் பத்துக்கும் மேற்பட்ட சோதிடர்கள யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகச் செல்லும் நடைபாதையில் இருந்து சோதிடம் சொல்லிவந்தனர்.

வீதியால் சென்று வருவோரை வலுக்கட்டாயமாக அழைத்து, அவர்களது கைரேகைகளைப் பார்த்தும், ஏடுக்ளைப் பார்த்தும் இவர்கள் சோதிடம் சொல்லிவந்தனர். இது தொடர்பாகப் பொதுமக்கள் சிலர் பொலிஸாரிடம் எடுத்துக் கூறியதையடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், இவர்கள் பின்னர் வீதியின் மறுபுறத்திலுள்ள கடைகளுக்கு முன்னாலிருந்து சோதிடம் சொல்லிவருவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதற்கு முன்னர் இத்தகைய கூட்டத்தினர் - விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அரியாலையில் இடம்பெயர்ந்தோருக்கு

# கட்டடப்பொருட்கள் கொடுத்தும் இதுவரை வீடுகள் கட்டவில்லை!

(அரியாலை)

அரியாலைப் பகுதியில், அண்மையில் வன்னியிலிருந்து மீளக்குடியமர்ந்த மக்களில் பலருக்கு - யு.என்.எச்.சி.ஆர்., ஜீ.ரி.இசற் ஆகிய நிறுவனங்கள் கட்டடங்களைக் கட்டுவதற்குரிய - மரம், சிமெந்து, ஓடுகள், கூரைத்தகடுகள் போன்ற பொருட்களைக் கொடுத்திருந்தும், பலர் இன்னமும் கட்டடங்கள் கட்டுவதற்குரிய நடவடிக்கைகளைத் தொடங்கவில்லை என அவ்வப் பகுதிகளுக்குரிய கிராமசேவை உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

கொடுக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி, கட்டடத்தை ஓரளவு பூர்த்திசெய்தாலே மிகுதிப் பொருட்களையும் பெற்றுக்கொடுக்கமுடியும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (55)

# எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த புதிய ஆய்வுகூட வசதிகள்

(வண்ணை)

வடபகுதியில் எயிட்ஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வேகமாக மேற்கொள்ளக்கூடிய வகையில், புதிய ஆய்வுகூட வசதிகள், அலுவலக உபகரணங்கள், அலுவலர்கள் போன்றோரை நியமிக்க சுகாதார அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளதாக, யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

எயிட்ஸ் தொடர்பான கருத்தரங்கு ஒன்று அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றபோதே, இதனைத் தெரிவித்தார்.

யுத்தம் நீங்கிய நிலையிலும் வேறுவிதமான பாதிப்புக்களைக் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்குவதாக, அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த நிகழ்வில் - கடந்த 30 வருடங்களுக்கு மேலாகப் பாலியல்நோய் தடுப்புத் திட்ட வைத்தியராகக் கடமையாற்றும் டொக்ரர் பி.பி.திரவியம் விருதுவழங் கிக் கௌரவிக்கப்பட்டார். (111)

# சின்னஞ்சிறு செய்திகள்

## கருத்தரங்கு

(மீசாலை)

இளம் பொருளியலாளர் மன்றம் நடாத்தும் கருத்தரங்கு - நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு, யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம், இலங்கை இனப்பிரச்சினைக்கான சமகால தீர்வு முயற்சியில் இந்தியாவின் பங்களிப்பு, எனும் தலைப்பில் அரசறிவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் உரை நிகழ்த்தவுள்ளர். (25)

## சமுர்த்தி வங்கி திறப்பு விழா

(சுதுமலை)

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வலயம் II இற்கான சமுர்த்தி வங்கி திறப்பு விழா- இன்று நண்பகல் 12 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.சிறினிவாசன் தலை மையில் நடைபெறவுள்ளது.

நுணாவில் மத்தி கண்டி வீதியில் அமைக்கப்பட்ட இந்த சமுர்த்தி வங்கியின் திறப்பு விழாவிற்கு -

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செலயக திட்டப்பணிப்பாளர் டி.சுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் ரி.மகேஸ்வரகுமாரும், தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் கே.கலைவாணனும் கலந்துகொள்ளவுள்ளனர். (44)

## ஒளிவிழா

சண்டிலிப்பாய் பிரதேச செயலாக நலன்புரிச் சங்கத்தினால் நடாத்தப்படும் 2003 இற்கான ஒளி விழா - எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், தலைவர் எம்.பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (44)

## சாரணர்களுக்கு விசேடபயிற்சி

யாழ்.மத்திய கல்லூரிச் சாரணர்களுக்கும், பரியோவான் முதலுதவிப்படை அங்கத்தவர்களும் விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதால், இன்று காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு அதிபர் க.இராஜதுரை அறிவித்துள்ளார்.

## சுகவாழ்க்கை வெளியீட்டு விழா

சுகாதாரக் கல்வி ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் எழுதிய 'சுக வாழ்க்கை' பாகம் 2 இன் நூல் வெளியீட்டுவிழா - எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு, இணுவில் மஞ்சத்தடி அரசோலை விநாயகர் கோவில் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பலநோ.கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்ரர் கே.ரி.சிவபாதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (44)

## திருச்சொரூபம் திருட்டு

(வடமராட்சி)

புலோலி புனித சூசையப்பர் ஆலயத்திலிருந்து 150 வருடங்கள் பழமை வாய்ந்த திருச்செரூபம் நேற்று பட்டபகலில் திருடப்பட்டுள்ளதாகப் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பருத்தித்துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (17)

## தையல் பயிற்சிநெறி நேர்முகப் பரீட்சை

(நெடுந்தீவு)

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினரின் அனுசரணையுடன், நெடுந்தீவில் நடத்தப்பட்டுவரும் தையல்பயிற்சி வகுப்பின் 2004 இல் பயிற்சிபெறும் மாணவிகளைத் தெரிவுசெய்யும் நேர்முகப் பரீட்சை நாளை செவ்வாய்க்கிழமை மாலை 2 மணிக்கு - நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறி தொடர்பான விண்ணப்பங்கள் ஏற்கனவே அவ்வப்பகுதி கிராம அலுவலர் ஊடாக விநியோகிக்கப்பட்டுப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

நேர்முகப்பரீட்சை தொடர்பான விபரங்கள் ஏற்கனவே கிராம அலுவலர்கள் மூலமாக உரியவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## விஞ்ஞானபீட மாணவர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் அனைத்து விஞ்ஞானபீட மாணவர்களுக்கான கூட்டம் - இன்று காலை 10 மணிக்கு விஞ்ஞான பீட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு சகலமாணவர்களையும் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (72)

## நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

இரவுவேளையில் வீடொன்றிலிருந்து நீர் இறைக்கும் இயந்திரமொன்றும், சைக்கிள் ஒன்றும் களவாடப்படடுள்ளது.

அரியாலை, நாயனமார்கட்டு சந்திக்கண்மையிலுள்ள எஸ்.நாகேந்திரன் என்பவரது வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக - யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் இது தொடர்பாகன விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றபோது, வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் உறக்கத்திலிருந்தாகவும், பின்னர் விழித்துக் கொண்டபோது திருடர்கள் தப்பியோடிவிட்டதாக்வும் தெரிவிக்கப்படுகிறது. (ச)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : த.தமிழ்விழி
முகவரி : குளத்தடி, விசுவமடு.

எட்டாவது அகவையில்



பெயர் : அ.அனோஜன்
முகவரி : நல்லாயன் வீதி, இளவாலை.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-------------
-------------------------------
முகவரி :----------------
-------------------------------
பிறந்த ஆண்டு:-------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------
பெற்றோர் ஒப்பம்



# நூல் அகம்

## மலரும் நினைவுகள்



இன்றைய சந்ததியினர் அறியாததை அறியவேண்டிய பல விடயங்களை கூறுகின்ற வகையில் ஒரு நூல் வெளிவந்துள்ளது. அந்த நூல் தனது இரண்டாவது பதிப்பையும் கண்டுள்ளது. அந்த நூலின் பெயர் 'மலரும் நினைவுகள்' என்பது மூத்த எழுத்தாளர்களில் ஒருவராக இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இலக்கியப் படைப்பாளிகள் வரிசையில் மதிக்கப்படுகின்ற ஒருவராக விளங்குபவர் இந்த நூலின் ஆசிரியர். அவர்தான். 'வரதர்' என்று அழைக்கப்படுகின்ற வரதராஜா என்பவராவார்.

இந்த எழுத்தாளரின் படைப்புக்களை வாசித்து இருக்காத ஒருவர் இருப்பார் என்றால், இலக்கியம் பற்றி அறியாதவராக இருப்பார் என்று கூறத்தக்க வகையில் 'ஈழத்தின் மறுமலர்ச்சி எழுத்தாளராக' இவர் விளங்குகின்றார்.

இந்தியாவில் எவ்வாறு 'எழுத்துச்காலம்' மணிச்கொடிக்காலம் என்ற வகையில் புகழ்பெற்ற இலக்கியக் காலங்களில் இருந்தனவோ, அதேபோல மறுமலர்ச்சிக்காலம் என்ற இலக்கிய வரையறையை உருவாக்கிக்கொண்ட எழுத்தாளராக இவர் விளங்குகின்றார்.

இவர் எழுதிய பல நூல்கள் வெளிவந்துள்ளன. அந்த வகையில் மலரும் நினைவுகள் என்ற அவரது நூல் சற்று வித்தியாசமான ஒரு நூலாக அமைந்துள்ளது.

இலக்கியம் என்பது தான் சார்ந்த சமூகத்தை சமூகத்தின் நடைமுறையில் உள்ள கொள்கைகளை இலக்கியம் எழுந்த காலப் பகுதியில் வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கம், பண்பாடுகளை பிரதிபலிக்கும் ஒன்றாக விளங்கவேண்டும் என்பதைச் காட்டிலும் - அவ்வாறு விளங்கும் என்று இலக்கிய கோட்பாட்டாளர்கள் கூறுகின்றார்கள்.

இத்தகைய இலக்கியக் கோட்பாட்டாளர்களுக்கு இணைந்த வகையில் இந்த மலரும் நினைவுகள் உருவாகியுள்ளது என்று குறிப்பிடலாம். இதனை எழுதிய வரதர் என்ற பெயருடைய வரதராஜா தான், சிறுவயது அனுபவங்களை, தன் சொந்த ஊரான பொன்னாலைக்கிராமத்தின் இயற்கை வாழ்க்கையோடு இணைத்துக் கூறுகின்றார்.

இலக்கியப் படைப்புக்களை எழுதுவது என்பது ஒருவகையான இலக்கியப்பணியாகக் கருதுகின்ற அதேவேளையில், இலக்கிய படைப்பாளி ஒருவர் அல்லது அறிஞர் ஒருவர் தமது வாழ்க்கை வரலாறுகளை எழுதலையும் இலக்கியப் பணியாகக் கொள்கின்ற மரபு, தமிழில் தற்போது உருவாகி-வளர்ந்து வருகின்றமையைக் காணலாம்.

இந்த வகையில் சு.வே.சாமிநாத ஐயரின் 'என் சரித்திரம்' என்ற நூல் வரதரின் மலரும் நினைவுகளை வாசிக்க இலக்கிய வாசகன் ஒருவனுக்கு ஞாபகம் வந்தே தீரும்.

இரண்டு வகையான வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் தமிழிலே காணப்படுகின்றன. இரண்டாம் பதிப்புக்கான அணிந்துரையில் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை அவரோடு வாழ்ந்து கண்டு, கேட்ட ஒருவர் எழுதுவது, அதாவது பெரும்பாலும் அவர் மறைந்ததன் பின்னர் எழுதுவது ஒன்றாகும்.

இரண்டாவது ஒருவர் தனது வரலாற்றை தானே எழுதுவது. இந்தவகையில் அமைந்ததே வரதராசரின் மலரும் நினைவுகள் என்ற இந்த நூலாகும். இந்நூலில் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியின் யாழ்ப்பாணச் சமூகத்தினை தனது எழுத்துக்கள் மூலமாக, எழுத்தோவியமாக எம் மனக்கண் முன்வைக்கிறார் வரதராசன்.

தனது கிராமத்தில் இருந்து ஆரம்பித்து, புன்னாலை என்ற கிராமம் எவ்வாறு பொன்னாலை ஆகியது என்ற கதையைக் கூறி, தனது காலத்தில் நிலவிய சாதிய ஒடுக்குமுறைகளை விபரித்து, தான் வாழ்ந்த வீடு, தன்னுடைய சைவக் குலத்து ஒழுக்கம், தன் தந்தையின் முற்போக்கு சிந்தனை, விளையாட்டுக்கள், பேய் பிசாசு பற்றிய நம்பிக்கைகள் இவ்வாறு தொடர்ச்சியாகத்தன் வரலாற்றோடு சமூக வரலாற்றை மலரும் நினைவுகளில் கூறிச்செல்லும் வரதர் சமூகவியல் ஆய்வாளர்களுக்கு நிறையத் தகவல்களை தந்துள்ளார். ஆய்வு செய்யவேண்டியது, சமூகவியல் ஆய்வாளர்களின் பொறுப்பாகும்.

வரதரின் மலரும் நினைவுகளில் வருகின்ற விடயங்களில் அந்தியேட்டி மடத்திற்கு, இளைஞர் சந்திப்பு என்ற ஒன்று, தற்போது காணமுடியாத ஒன்று, தன் சகாக்களுடன் சபதம் செய்துகொண்டு சுடலைக்குச் செல்லும் வரதரின் மனநிலையை நன்றாக விபரித்துள்ளார். பின்னர் பந்தயப் பணமாக 10 சதத்தை வெற்றிகொண்ட பெருமிதம் புலப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை பத்து சதத்திற்கு என்னென்ன வாங்கக் கூடியதாக இருந்தது என்ற அவரின் பட்டியல், பத்து ரூபாய்க்குக் கூட இப்போது அவற்றினை வாங்க முடியுமா, என்ற ஆதங்கத்தைத் தருகிறது.

இதேவேளை, வரதரின் எழுத்துக்களால் மலரும் நினைவுகள் ஓவியமாகப் பார்க்க முடிகின்றது என்றாலும், அவரின் நூலில் 1920 ஆம் ஆண்டு வரதர் கண்ட, தற்போதும் எஞ்சியுள்ளதாகக் குறிப்பிடும் சில இடங்களை புகைப்படங்களாக நூலில் இணைத்திருந்தால் நன்றாக அமைந்திருக்கும், என்பதைக் கூறாமல் இருக்க முடியவில்லை.

இறுதியாக வரதர் போல இருக்கும் மூத்த எழுத்தாளர்கள் பலருக்கு எழுகின்ற நினைவுகளை எதிர்காலத்தவரும் அறிந்துகொள்வதற்கு வசதியாக, இவ்வாறான நூல்களை எழுதலாம் என்று, வரதர் மலரும் நினைவுகள் நூல் மூலம் குறிப்பிடுகின்றார். அதனைப் பின்பற்றி மூத்த எழுத்தாளர்கள் எழுதுவார்களாக இருந்தால் தமிழுக்கு அது ஆரோக்கியமான விடயமாக அமையும் எனலாம்.

- பூ.நகுலன்.

# வெள்ளம்



வெள்ளம் வந்தெம்மை
விரலால் தீண்டி
வேதனை போக்கும் என்ற
நம்பிக்கை இருக்கிறது
இவ்வெள்ளவோட்டத்தின் பின்னணியாய்
உயிர்விதை பூக்கள் நடக்கின்றன
வெள்ளத்திற்கான காத்திருப்பு
நீண்டகாலமாகும்
கவலைத் திரை கிழிக்க
வெள்ளத்திற்கான வரவு முக்கியம்
வெள்ளத்திற்கு அணைபோட
தெற்காட்சி சீலத்தின் முயற்சி
எரியுண்ட தேசத்திற்குத்தான்
தீயின் கொடுமை தெரியப்போகிறது
சிறு சிறு அணைகளை உடைத்து
நெருங்கிவந்துள்ள வெள்ளமானது
இனி... பெரிய பெரிய
அணைகள் போடப்பட்டாலும்
அதற்கு மேலாய் அன்றேல்
அதனையுடைத்து
எமை வந்து சேரவேண்டும்
அவ்வெள்ளத்தின் வரவிற்தான்
எம் மகிழ்வு தங்கியிருக்கப்போகிறது.

அ.தில்லைதாசன்

# மூக்குவரை வரும் கோபம்



அவனும்
என்றைக்கோ ஒருநாள்
காததோரம் நரைவிழுந்து
மீசை மழித்து
இளமையின்
விசிராந்தை தனங்கள்
மறந்துபோய்
என்னைப் போலவே
ஏதோ உறுத்தலுடன்
தன் மகளோடு
அவசரமாய் எங்கோ
இந்த வீதிவழி
சென்றுகொண்டிருக்கக்கூடும்
மழைதூற தவளை
தன் வாய்திறந்து
நாளம் வெடிக்க கூக்காட்டவும்
காகம்
மாமிசக் குவியலை
அடையாளம் கண்டு கரையவும் கூடும்
ஓநாய்களின் வாய் நீர் வழிந்து
அவள் சட்டை பற்றிக்கொள்ள
மரநாயின் கண்கள்
அங்கங்கள் பற்றி
வர்ணிக்கவும் கூடும்
அப்போது அவனுக்குகூட
என்னைப்போலவே
அவர்களை சுட்டுவிடும் கோபம்
மூக்குவரை வந்து...?

சைலஜா

# புலவர் தருமி - கவிஞர் பிர்தௌசி



மாமூது இபின் சபக்டஜின

★ முகமது ஷா - கி.பி. 998-1030
★ கவிஞர் பிர்தௌசி - கி.பி. 940-1020
★ நக்கீரர் - கி.பி. 100-130
★ நக்கீரதேவ நாயனார் - கி.பி.10 ஆம் நூற்றாண்டு

தம் நகராம் 'தௌசிற்கு' மீண்டனர்!
அச்சமயம்தான் தனது அமைச்சரும் சகாக்களும்
கூடிச் செய்த கொடிய சதியினால்
கவிஞருக்கு உரியது முழுவதும்
கொடுபடாமல் தடுக்கப்பட்டமையும்
பெரியதோர் மோசடி நடந்திட்டமையும்
தன் வாக்குறுதி மீறப்பட்டமையும்
தௌசியின் மன்னனால் அறியப்பட்டன!
அறுபதினாயிரம் சொம்பொற் காசையும்
கவிஞரின் கைகளிற் சேர்த்திடும் வண்ணம்
கருத்துடன் கடிதிலே அனுப்பினான் மன்னன்!
ஆயினும் அரசன் அனுப்பிய காசுகள்
பாவலன் உடலம் கல்லறைப் படுக்கையுள்
அடக்கம் செய்யப்பட்ட பின்னர்தான்
கவிஞரின் மகளின் கைகளைச் சேர்ந்தன!
கவிஞரின் மகளோ சீற்றம் மிகுந்திட
ஆட்சிபீடத்தின் செயலினை வெறுத்து
அப்பொற் காசினைத் தீண்டவே மறுத்தாள்!
அவ்வேளை கவிஞரின் உறவினர் ஒருவர்
அரசன் அனுப்பிய பொற்காசு சனைத்தையும்
பெற்றுக் கொண்டு விட்டா ராயினும்
அரசனின் வாய்மொழி நிறைந்ததும் இல்லை!
கவிஞரின் கனவு கனிந்ததும் இல்லையே!!

சம்பக பாண்டியன் வாக்குறுதிப்படி
தருமிக்குத் தருவதைத் தடுத்த நக்கீரரே
தருமிக்கு ஆயிரம் பொன்னைக் கொடுத்து
அரசனின் வாக்கைக் காத்தனர்- கிழக்கினில!
மன்னன் முகம்மது ஷாவின் ஒப்புதற்படி
கவிஞர் பிர்தௌசிற்குச் சேர வேண்டிய
அறுபதினாயிரம் பொன்னையும் - கவிஞர்
இறந்த பின்னரே வழங்கினர் - மேற்கினில்!!

முருகு

# தன் இருப்புக்காய்

இவ்வார சிறுகதை

முருகு பாரிமகன்

நெருப்பு வெயில் கொளுத்தி தீர்த்தது.

இளங்கோவின் தேகம் வியர்த்து தெப்பமாகிவிட்டது.

சற்று நேரம் ஆறி இருந்துவிட்டுச் செல்ல நினைத்தவன் படர்ந்துவிரிந்து நிமிர்ந்து குடை விரிந்து நின்ற அந்த ஆலமரம் ஆறுதல் அளித்தது.

சருகுகளைக் காலால் தட்டி ஒதுக்கிவிட்டு, கீழே கிடந்த மரக்குற்றியில் ஏறி அமர்ந்தான். அந்த மரக்கிளை ஒன்றில் சிறு குருவிக்கூடு. சின்னச் சிறகடித்து வட்டமிட்டு பறந்த தாய்க் குருவியைக் கண்டதும் கீச், கீச், என்று சத்தமிட்டு தங்கள் அலகுகளை அகலத்திறந்து ஆரவாரித்த குஞ்சுகளுக்கு இரையைக் கொடுத்துவிட்டு, மீண்டும் பறந்து சென்ற தாய்க் குருவி, மீண்டும் மீண்டும் வந்து போனது.

இளங்கோவின் கண்கள் அந்தக் காட்சியையே கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தன.

என்ன உலகமடா இது சின்னக் குருவி கூட தனக்கென ஒரு கூடு கட்டி தன் குஞ்சுகளுடன் கூடி வாழ சுதந்திரம் இருக்குது. எனக்கு மட்டும்...

அவன் நீண்ட பெருமூச்சு ஒன்றை உதிர்த்தினான். அவனுக்குச் சொந்தமொன்று இருந்த நிலமும், வீடும் பறிபோய் ஏதிலியாகி விரட்டப்பட்டு வன்னிக்கு வந்தவன், குடி அமர்ந்த இடங்களை எல்லாம் விட்டு விட்டு, ஓடி உயிர் காத்து தன் இருப்புக்காய் அலைந்தவனுக்கு ஒரு உறவுக்காரனின் நிலத்துண்டு காடு மண்டிக்கிடந்ததைக்கண்டு கொண்டான்.

அவர்களும் போர்ச் சூழலால் அந்த இடத்தைவிட்டுப் போய் பல வருடங்களாகத் திரும்பி வரவேயில்லை.



அவர்கள் பல வசதிகளோடு கொழும்பில் இருக்கிறார்கள். என்பதும் அவனுக்குத் தெரியாமல் இல்லை. வெளிநாட்டில் இருந்து அவர்களுக்குத் தேவையான பணம் கிடைத்தது.

அலைவதுதான் வாழ்க்கை என்றால், அவன் வாழ்வதன் அர்த்தமென்ன.

அவன் உழைக்கும் சொற்ப ஊதியத்தில் காணி வாங்கி அடிக்கடி வீடு கட்டுவது என்பது சாத்தியமானதல்ல.

ஏதோ சிறிது காலம், அந்தக் காணியில் குடியிருப்போம் என்ற முடிவுக்கு வந்தான்.

அரும்பாடுபட்டு காணியைத் திருத்தினான். போர் வடுக்களால் உடைந்து, அலங்கோலமாக காட்சிதரும் அந்த வீட்டை அப்படியே விட்டுவிட்டு அருகே ஒரு கொட்டிலை அமைத்துக்கொண்டான்.

சீ... என்ன வாழ்க்கை

அவன் அலுத்துக்கொண்டான்.

போர் ஓய்ந்து அமைதிநிலையைப் பயன்படுத்தி, போனவர்கள் திரும்பிவருவதும், நிவாரணங்களுக்குப் பதிவதும், காணிகளை விற்றுவிட்டு தாம் இருக்கும் இடங்களுக்குப் போவதுமாக காரியங்கள் நடந்தேறிக்கொண்டிருந்தன.

இந்த நெருக்கடியான கட்டம் தான் இளங்கோவின் தொண்டையைத் திருகியது. விடுவிக்கப்பட்ட அந்தப் பிரதேசம் ஆகையால் காணிக்குச் சொந்தக்காரன் காணி பார்க்க வந்துவிட்டான்.

அநாதையாய் கைவிடப்பட்டு தேடுவாரற்று கிடந்த காணியை வளப்படுத்தி சோலையாக்கி நிமிர்ந்து நிற்கும் தென்னைகளும் வாழை, எலுமிச்சை, தோடைகளும் காணிச சொந்தக்காரனை காணக்கூசின.

அவன் இளங்கோவை படாதபாடுபடுத்திவிட்டு காணிக்கு விலைபேசினான். இளங்கோவிடம் அவ்வளவு தொகை ஏது.

அவன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நின்றான்.

வந்தவன் ஒருமாதத் தவணை கொடுத்துவிட்டுப் போய் விட்டான். இளங்கோவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அவனது பிரதேசமும் விடுவிக்கப்பட்டிருந்தால் அவன் இங்கு இருந்திருக்கமாட்டான்.

அயராது உழைத்து அரும்பாடு பட்டு வாங்கிய நிலமும், கட்டிய வீடும் எவனோ ஒரு அந்நியனின் ஆழுகைக்குள் கிடக்கிறது. சமாதானச் சூழலிலும் அவன் தன் வீட்டிற்குப் போக முடியவில்லை. அது பாதுகாப்பு வலயம் என்ன செய்ய முடியம்.

ஒரு கோப்பைக்குள் உண்டு, ஒரு வீட்டில் உறங்கியவர்களுக்கே கருணை இல்லை என்றால், அந்நியன்... அதுவும் அதிகாரத்தில் உள்ளவன்...

இப்படி ஒரு வேதனை வரும் என, அவன் எதிர்பார்த்திருந்தால் வேறு இடம் பார்த்திருப்பான். ஆனால்..

குருவியின் கீச் சீச் சத்தம் மீண்டும் கேட்டது.

அவன் அண்ணார்ந்து பார்த்தான்.

அது சுதந்திரமாக பறந்து வட்டமிட்டு தன் குஞ்சுகளுடன் ஏதோ பேசிக்கொண்டது.

தாயின் சத்தம் கேட்டு குஞ்சுகள் அலகைத் திறந்து இறகை விரித்து அசைந்து ஆரவாரித்தன.

காற்றுக்கும், மழைக்கும், வெயிலுக்கும் கவலைப்படாமல் மகிழ்வாகப் பறந்து திரியும் இந்தச் சிறு குருவியின் சுதந்திரமான வாழ்வுகூட அவனுக்கில்லை.

தன் வரவுக்காகவும் பதிலுக்காகவும் ஏக்கத்தோடு வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கும் மனைவி மக்களின் நினைவில் அவன் மனம் மூழ்கிப் போனது.

என்றோ ஒரு காலத்தில் வாழ்ந்த மனிதன், அவனது உழைப்பு உறவு எல்லாம் பொதுவாய் இருந்த காலத்தில் தான், அவன் மனிதத்தன்மையை தன்னுள் கொண்டிருந்தான் என்று கூறப்படுவதற்கும், நாகரிக வளர்ச்சியில் முன்னிற்கும் இந்தக் கால மனிதனுக்கும் உள்ள மன வேறுபாட்டை நோக்கிப் பார்க்கும் போது, மனிதம் இப்போது செத்துவிட்டது என்ற எண்ண ஓட்டத்தில் மிதந்த இளங்கோவால், அதற்குமேல் அந்தவிடத்தில் பொறுமையாக இருக்க முடியவில்லை.

கால்கள் பின்னலிட மனச்சோர்வோடு எழுந்து நடந்தான்.

மனிதனின் வாழ்வை வளம்படுத்தத் தோன்றிய அரசே, தனது நிலம் என உரிமை கொண்டாடும் போது, மனிதன் விடுவானா? இவன்தான் அரசின் அங்கமாகி நிற்கிறான்.

ஆனால், இந்த மண்ணில்வாழ்ந்து இந்த மண்ணின் விடிவிற்காக தமது வாழ்வை அழித்தவர்கள் இந்த மண்ணிலே வாழ முடியாமல் அலைகிறார்கள்.

நீதி நியாயம் எல்லாம் சிறைப்பட்டு இறக்கிறது.

எண்ண அலைகளின் நீந்திக்கொண்டே இளங்கோவின் கால்கள் நடந்துகொண்டு இருந்தன.

வீட்டிற்குச் சென்றால் போதும், ஆயிரம் பிரச்சினைகள் கூரம்புகளாகி மண்டையை குடையத் தொடங்கிவிடும். வேலைக்குப் போனால் அங்கும் அப்படித்தான்.

இன்று ஞாயிறு விடுமுறை நாளாகையால் எங்கேயாவது காணி தேடி வருவதுதான் இளங்கோவின் குறியாகி இருந்தது.

சும்மா காடுபத்திப் போய்க் கிடந்த காணியளுக்கெல்லாம் நகர நிர்மாணம் என்ற கதை கிடைத்த போதே, விலை சூடு பிடிக்க ஆரம்பித்துவிட்டது.

விற்பதும்வாங்குவதும் என வியாபாரம் நிலையில் உச்சத் திற்கே போய்விட்டது.

அப்படிப் போட்டியிட்டு அதிகவிலை கொடுத்துவாங்க அவனுக்கு அந்த வசதியும் இருக்கவில்லை.

அவன் கால்கள் நடந்துகொண்டிருந்த போது இருமருங்கும் கிளை பரப்பி நிற்கும் மரஞ்செடிகளின் செழிப்பும், அழகும் அவன் மனதில் ஆயிரம் எண்ணங்களைத் தோற்றுவித்தன. வெறும் நிலமாக காடுபத்திக்கிடக்கும் அந்த இடத்தில் போர்த் தழும்புகள்பட்டு இடிந்தும் சிதைந்தும் தரைமட்டமாகிக் கிடக்கும் வீடுகளின் எச்சங்களும், அவன் மனக்கலவரத்தை உண்டு பண்ணின.

ச... சும்மா கிடக்குது நிலம். ஆனால் ஆரும் குடியிருக்க வந்தால், உடனே வந்து தொல்லை கொடுக்க ஆரம்பித்துவிடுவான் சொந்தக்காரன்.

எல்லாம் தனக்குத் தனக்கு என்ற நினைக்கிற உலகத்தில இல்லாதவனுக்கு சொந்தம் எதுவும் இல்லை என்ற நிலை.

ஒருவன் உப்பரிகையிலிருந்து கழுவும் தண்ணீரை ஏந்திக் குடிக்கவும் முடியாமல் கீழே ஒருவன் விரட்டப்படுகிறான். இதுதான் இன்றைய மனித வாழ்வின்... அவலம்...

இன்றைய பொழுதும் அவனுக்கு கரடி விடத்தான் போகிறது. என்றால், அவனுக்கான உதயப்பொழுதை அவனால் சந்திக்க முடியாமல் போய்விடுமா என்ற ஏக்கம் நெஞ்சைத் துளைத்துக்கொண்டு இருந்தது.

இப்போது அவன் குடியிருக்கும் வீடு என்றால், குழந்தைகள் பள்ளிக்கூடம் போய்வரவும், அவன் வேலைக்கு போய்வரவும் வசதியாக அமைந்திருந்தது.

அந்த வாய்ப்பை இழந்துவிட்டால்...

மேலும் துன்பத்தில் உழல வேண்டிவரும் என்பதும் அவனுக்கு மேலும் கவலையைத்தந்தது.

எப்படி இருந்தாலும் அவன் இருப்புக்கு ஒரு இடம்வேணும்...

சாலையின் ஒரு முடக்கில் திரும்பியவனுக்கு பரந்தாமன் வாத்தியாரின் நினைவு வந்தது. அவரைச் சந்தித்து நிலைமையை எடுத்துச்சொன்னால் சிலவேளை அவரால் எதுவும் உதவி கிடைக்கலாம் என்ற எண்ணம் பொறிதட்டியது.

பரந்தாமன் வாத்தியார் அவனுக்கு உறவு முறையாக இல்லாவிட்டாலும், அவனது பிள்ளைகளைப்படிப்பிக்கும் வகையில், பழக்கமாகி விட்டவர். அதோடு அவர் கிளிநொச்சிப் பகுதியில் நிரந்தரக் குடியிருப்பாளர். சுழிவு நெளிவுகள் தெரிந்தவர். மற்றவர்களின் துன்பங்களில் கலந்துகொள்ளும் நல்ல மனம் படைத்த ஒருவர். கவனிப்பும் உண்டு இப்படி எங்கேயாவது ஒரு சில மனிதர்கள் வாழ்வதால்தான் மனித குலம் தனது தலையைக் கொஞ்சம் நிமிர்த்திப் பார்க்க முடிகிறது. என்ற எண்ணத்துடன் அவன் நடந்தான்.

மனிதன் நாடோடியாகத் திரிந்த காலத்தில், நிலம் அவனைத் தாங்கி நின்றது. அதை அவன் தனக்கெனப் பங்கு போடவில்லை. நிலையான இருப்புக்கு அவன் தன்னை உருவாக்கிக்கொண்ட போது, பலம் படைத்தவன் தனக்கென ஏராளமான நிலத்தைச் சொந்தமாக்கத் தெரிந்துகொண்டான். பலமே எதையும் முடிவுசெய்யும் நிலை ஏற்பட்டபோது, பலமற்றவன் அவனது தலைமுறைகள், நிலமற்றவர்களாக மாறினர் என்பது வரலாறுதான். ஆனால் நிலத்தின் விடிவிப்புக்காக உயிர்கள் தம்மைத் தியாகத்தீயில் அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் இந்த கால ஓட்டத்தில், விடுதலை தேடும் அந்த மக்களே, வீதி ஓரங்களில் ஒட்டிக்கொள்ள இடம்தேடும் நிலைதானா?

போரின் தீச்சுவாலையின் படர்வில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் பகைபற்றி நிற்பதும், மீதி நிலங்களில் சொந்தங்களின் இறுக்கங்களும் மனிதப் பண்புகளின் வடிவங்களாகி விட்டனவா?

அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

மனிதனுக்கும், அந்தச் சின்னக் குருவிகளுக்கும் இருக்கும் வாழ்க்கையின் வித்தியாசங்கள் அவர்களும் தங்கள் உயிர்காப்புக்காக போராட வேண்டி இருந்தும் அவை சுதந்திரத்தை அனுபவிக்கும் பாங்குகள்.

அவனுக்கு மனிதகுல மாண்புகளின் மீது அருவருப்பைத் தந்தன.

இன்னும் சிறிது தூரம் நடந்துவரும் வளைவில் திரும்பினால், போரின் நினைவுச் சின்னமாகக் காட்சிதரும் பரந்தாமன் வாத்தியாரின் வீடுவரும்.

சுவர்கள் இடிந்து சிதைந்த வீட்டை ஏதோ ஒரு வழிபார்த்து திருத்தி சாதாரண வாழ்வு வாழ்ந்துகாண்டிருக்கும் அந்த மனிதனைச் சந்திப்பது இளங்கோவிற்கு நம்பிக்கை தருவதாய் இருந்தது.

வீட்டிற்கு அண்மையில்வந்ததும் இளங்கோ உற்சாகம் அடைந்தான் முகத்தில் மலர்ச்சியை உருவாக்கிக்கொண்டு தெரு வாசல் வழியாக உள்ளே நுழைந்தான்.

தெரு வாசலில் இருந்து வீடு சற்று தூரத்தில் அமைந்து இருந்தது. நடைபாதை அதன் இருமருங்கும் அழகான குறோட்டன் செடிகள், அவற்றை எல்லாம் ரசிக்கும் மன நிலையில் அவன் இருக்கவில்லை. ஆனாலும் ஏதோ அந்த இயற்கை அழகை விழிகள் மேயத் தவறவில்லை.

கிட்டே வந்ததும், வாத்தியார் என்று குரல் கொடுத்த இளங்கோவின் கால்களை நக்கி வாலை ஆட்டி நின்றது தமிழன் என்ற நாய். அது இளங்கோவின் நண்பன் வாத்தியாரின் செல்லப் பிராணி.

ஏதோ வேலையாக இருந்த பரந்தாமன் வாத்தியார் வெளியே வந்து... வா... வா இளங்கோ என வரவேற்றார்..

அந்த வீட்டில் அவரது அம்மாவும், அப்பாவும், அவரும் தான் குடியிருந்தார்கள்.

அவரது குடும்பம் கனடா சென்று பல வருடங்கள் கழிந்துவிட்டன. பிள்ளைகள் அங்கேயே படிக்கிறார்கள். ஆனால் அவர் தனது தாய் தந்தையரை விட்டு போக மனம் இன்றி இங்கேயே தங்கிவிட்டார்.

வாத்தியார் மிக ஆதரவாக அவனை அமரவைத்தார். தானும் அமர்ந்து கொண்டார்.

'என்ன இந்தப்பக்கம்'

'நான் ஒரு விடயமாக' வந்தநான் சேர்

அவன் தயக்கத்துடன் இழுத்தான்

'என்ன விழுங்கிறீர், எதையும் கூச்சம் இல்லாமல் சொல்லத் தெரியவேணும்.'

அவர் மற்றவரின் மனம் புண்படாமல் பேசத் தெரிந்தவர் அதனால்தான், மாணவர் மத்தியில் அவரால் நின்று பிடிக்க முடிந்தது.

'இல்லைசேர் எனக்கு குடியிருக்க ஒரு துண்டு நிலம் வேணும் அதுதான்'

'ஏன் இப்ப இருக்கிற காணியுக்கை ஏதும்சிக்கலே, அது உம்முடைய சொந்தக்காரற்ற காணிதானே'

வாத்தியார் அவனைக் கனிவோடு பார்த்தார். அவன் அவரைக் கெஞ்சுதலோடு பார்த்தான். ஒரு மாதத்திற்குள் காணியால எழும்பச்சொல்லி கடிதம் போட்டிருக்கினம். தாங்கள் வந்து இருக்கப் போகினமாம்... அதுதான்.

வாத்தியார் ஒருகணம் அமைதியாக இருந்தார். தன் விரலால் நெற்றியை வருடிக்கொண்டவர், நீண்டதொருபெருமூச்சுடன் உவங்கள் காசில மிதக்கிற கூட்டம் துன்பப்படுகிறவர்களைப் பற்றி யோசிக்காங்கள். இப்பதம்பி சனம் பலமாதிரி ஓடுதுகள். அதுசரி உதுகள் கொழும்பை விட்டிட்டு இஞ்சை வராயினம். காணியை விக்கிற நோக்கம் இலலையோ.

'இருக்கலாம்' இளங்கோ இணக்கம் தெரிவித்து தலையை ஆட்டினான்.

'தம்பி உன்ர நிலைமை எனக்குத் தெரியுது.'

என்னசெய்ய... ஆ... எனக்கு ஒரு யோசனை வருகுது

'சொல்லுங்கோ'

இளங்கோவின் நெஞ்சில் தேன் வார்த்த மாதிரி இருந்தது. ஒருமுறை நிமிர்ந்து அமர்ந்தான்.

'நீ தம்பி குத்தகை குடுப்பியெண்டால் நான் ஒரு காணி ஒழுங்குபண்ணித் தருவன். ஒரு மூன்று நான்கு வருடம் இருக்கலாம். பிறகு யோசிப்பம்.'

'கன காசு வருமோ சேர்'

பயப்படாத நல்ல காணி. வருமானம் எதுவும் இல்லை. கிணறுமட்டும் இருக்குது. மிச்சம் உன்னைப்பொறுத்தது. ஒரு பிசகும்வராமல் நான் பார்க்கிறன். ஐம்பதுவாழை, இருபது தென்னை இப்படி வைச்சியெண்டால், என்று வாத்தியார் இழுக்க விழுந்தவனை மாடு மிதித்த மாதிரித்தான் இளங்கோவுக்குப்பட்டது. என்றாலும் ஒரு நெருக்கடியில் இருந்து தப்பிக்கொள்ள இது சரிபோலத் தெரிந்தது.

நிலம் காடுபத்தித்தான் கிடக்குது.

நீ திருத்திப்போட்டு வீடு போட்டு இரு.

இளங்கோ மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை.

லீவான நேரம் வா காணியைக்காட்டுறன். உனக்கு கிட்டத்தான். இளங்கோ வாத்தியாரை நன்றிப்பெருக்குடன் பார்த்துவிட்டு எழுந்து நடந்தான்.

அது வாத்தியாருக்குச் சொந்தமான காணி என்பது அவனுக்கு எப்படித் தெரியும். ★

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்*
*மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# முடியும் ஆண்டும், முடிவற்ற பிரச்சினைகளும்

இன்னும் ஒரு வாரத்தில் புதிய ஆண்டு, அதாவது 2004 ஆம் ஆண்டு பிறக்கப்போகின்றது.

சமாதானம் குறித்த ஏராளமான நம்பிக்கைகளுடன், அமைதியான இயல்புவாழ்க்கை பற்றிய கனவுகளுடனும், இனப்பிரச்சினைக்கு ஏதாவது ஒருவகையில் நியாயமான அரசியற்தீர்வு காண்பதற்கான வழியொன்று பிறக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்புடனும், பிறந்த கடந்த ஆண்டும் சகலவற்றையும் பொய்மையாக்கிவிட்டு அரசியல் குழப்பங்கள், சமாதானத்தில் பின்னடைவு என்பவற்றை பிறக்கும் புத்தாண்டில் மக்களுக்கான பரிசாக வழங்கிவிட்டு, மெல்ல மெல்ல தனது இறுதி மூச்சை விட்டுக்கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு முடியும்போது சமாதான நகர்வுகள் ஒரு வேகத்துடனும், புதுவீச்சுடனும் நடைபெறுவதற்கான சூழல் ஒன்றை சர்வதேச அனுசரணையுடன் உருவாக்கி, இந்த ஆண்டின் கையில் அதனைத்தொடர்ந்து வெற்றிகரமாக மேற்கொள்ளும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டே சென்றது.

கடந்த ஆண்டுக்கு - அதாவது 2002 ஆம் ஆண்டுக்கு மக்கள் மகிழ்ச்சியுடனும், நன்றியுடனும் விடைகொடுத்தார்கள்.

இந்த ஆண்டு தனது பொறுப்பை செவ்வனே செய்து, மீதியை பிறக்கப்போகும் ஆண்டின் கையில் தொடர்வதற்கான பொறுப்பை நிறைவுடன் ஒப்படைப்பதற்கான வாய்ப்பினைத் தென்பகுதியின் பேரினவாத அதிகார அரசியற் தலைமைகள் இந்த ஆண்டுக்கு வழங்காமற்போனது அதன் துரதிஷ்டமேயாகும். விடுதலைப் புலிகள் சமாதான நகர்வுகளில் காட்டிய நிதானமான உறுதியையும், தென்னிலங்கையில் இனவாத தலைமைகள் காட்டாததும், சர்வதேச சமூகம் பேச்சுக்களின் ஆரம்பத்தில் காட்டிய வேகத்தை இடையில் சிறிலங்கா ஆளும் அரசுக்கு அனுகூலமாக, பக்கச்சார்பாக காட்டமுற்பட்டதும், பேச்சுவார்த்தைகளில் தேக்கநிலை உருவாகக்காரணமாயிற்று.

குறிப்பாக வாஷிங்ரன் மாநாட்டின்போது சமாதான நகர்வின் முதற்பங்காளிகளான விடுதலைப் புலிகளை அழைக்காது புறக்கணித்தமையும், இடைக்கால நிர்வாகம் தொடர்பான நியாயமான கோரிக்கைக்கு அரசு பின்னடித்தமையும், சமாதானம் குறித்த முன்னெடுப்புக்களில் சர்வதேச சமூகத்தினதும், சிறிலங்கா அரசினதும் மூலோபாயங்கள் மீது சந்தேகங்களை ஏற்படுத்தியமையே சமாதான செயற்பாடுகள் ஸ்தம்பிதமடையக் காரணமாயிற்று.

மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து ஆரம்பத்தில் அரசியல் தீர்க்கதரிசனமற்ற அமைப்புக்களும், சில விமர்சகர்களும் கடுமையான கருத்துக்களை அவரவர் தேவைக்கும், அரசியல் நோக்கத்துக்கும் ஏற்ப கூறியபோதிலும் அவையாவும் அர்த்மற்றவையே என்பதையும், புலிகள் தமது நகர்வுகளை தொலைநோக்கு சிந்தனையுடன்தான் மேற்கொண்டார்கள் என்பதையும் அண்மைக்கால சம்பவங்கள் ஒவ்வொன்றும் தெளிவாகவே நிரூபித்துவருகின்றன.

முதலில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக இழுவல் போக்கினைக் கடைப்பிடித்த அரசு, முதலில் சாட்டுக்கு இது தொடர்பாக ஒரு யோசனையையும் பின்னர் சமாளிப்பதற்காக மற்றொரு திட்டவரைபையும் முன்வைத்து - தமிழ் மக்களையும், விடுதலைப் புலிகளையும் பேய்க்காட்ட முயன்றது.

இதன்போது விடுதலைப் புலிகள் மதிநுட்பத்துடன் செயற்பட்டு அரசின் போலியான வரைவுக்குப் பதிலாக, சர்தேச நாடுகளைச் சேர்ந்த அரசியல் வல்லுனர்கள் மற்றும் சட்ட வல்லுனர்களின் நிபுணத்துவ ஆலோசனைகளுடன்கூடிய மாற்றுத்திட்ட வரைபொன்றை சமர்ப்பித்தபோது பேரினவாதிகள் அதிர்ந்துதான் போயினர்.

அதனையடுத்து ஜனாதிபதி மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகள் - தற்செயலாக ஏற்பட்ட நிகழ்வுகளே அல்ல.

நீண்டகால சமாதான நடவடிக்கைகளை முறியடித்து மீண்டும் போர்நிலையை உருவாக்கி தமிழ்மக்களை அரச பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் ஒடுக்குவதற்கு சந்திரிகா - பேரினவாத சக்திகளினதும், சில வெளிஆதிக்க சக்திகளினதும் தூண்டுதலின்பேரில், அவற்றின் பின்புல ஆதரவுடன் நீண்டகாலத் திட்டமிடலின் மூலம் பிரதமர் நாட்டில் இல்லாதவேளையில் மேற்கொண்டவைகளாகும்.

ஆகவே - இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிதான் சமாதானத்தை கேள்விக்குறியாக்கியுள்ளதெனில், அதற்கான முழுப்பொறுப்பும் சந்திரிகாவையும், அவரின் பின்நின்று இயங்கும் மற்றும் இயக்கும் அமைதிவிரோத சுயநல அரசியல் இலக்குகளைக்கொண்ட சக்திகளையுமே சாரும் என்ற செய்தியைத்தான் முடியப்போகும் இந்த ஆண்டு உலகிற்கு சொல்லிப்போகிறது எனலாம்.

இந்தச் செய்தியானது, எத்தகையான உணர்வலைகளைச் சர்வதேச சமாதான ஆர்வலர்களுக்குள் ஏற்படுத்தப்போகிறதென்பதை வைத்தே, அடுத்த ஆண்டில் சமாதான முன்னெடுப்புக்கு ஏற்படப்போகும் கதியைக் கணிப்பிடமுடியும்.

ஆக முடியப்போகும் இந்த ஆண்டிலும் பௌத்த சிங்களப்பேரினவாதிகள் இன்னமும் சமாதானத்தை அங்கீகரிக்கும் மனப்பக்குவம் கொண்டவர்களாகத் தம்மை மேம்படுத்திக்கொள்ளவில்லை என்ற துயரச் செய்தியையும் உலகிற்கு அறிவித்துவிட்டே செல்லப்போகிறது.

## நாடும் நடப்பும்




*செய்தி:* பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு ரத்வத்த பின்கதவால் முயற்சி....

### கட்டுநாயக்க விமானநிலையத்திற்கு மாற்றாக

# அம்பாந்தோட்டையில் விமான நிலையம் அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை!

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்துக்கு மாற்றான விமானநிலையத்தை - 60 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தனமல்விலவுக்கு அண்மையாகவுள்ள குடாஓயா என்ற இடத்தில் - இந்த விமானநிலையத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாக, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத் திட்டமிடல் பணிப்பாளர் ஓ.ஜே.எவ்.பெரேரா தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் விமானநிலையத்தை அமைப்பதன் மூலம், இந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை அளிக்கமுடியுமென்பதுடன், சுற்றுலாத்துறை அபிவிருத்தியடையும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையம் மீது புலிகள் தாக்குதல் நடத்தியபின்னர், மாற்று விமானநிலையம் ஒன்றை அமைக்கவேண்டிய அவசியம் எழுந்திருக்கிறது.

கட்டுநாயக்க விமானநிலையம்மீது தாக்குதல் நடத்தப்பட்டதும் - இலங்கையில் வேறு சர்வதேச விமானநிலையங்கள் இல்லாததால், வெளிநாடுகளுடனான விமானத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. இங்கு வந்த விமானங்கள் சென்னை, மாலைதீவுக்கு திருப்பிவிடப்பட்டன.

அம்பாந்தோட்டையில் அமைக்கப்படவுள்ள இந்த விமான நிலையத்தில் - மூன்று விமானங்கள் தரித்துநிற்க வசதி செய்யப்படவுள்ளதுடன், உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்கும் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. படிப்படியாக இந்த விமானநிலையத்தை சர்வதேச தரத்துக்கு உயர்த்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பொ.ஐ.மு - ஜே.வி.பி உடன்படிக்கை இவ்வருடம் கைச்சாத்திடப்படமாட்டாது

### டி.எம்.ஜெயரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை, இந்த வருடத்தில் கைச்சாத்திடப்படமாட்டாது என்று - பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்தார்.

இரு கட்சிகளும் மிகப்பெரிய கூட்டணி ஒன்றை உருவாக்கும் நோக்கில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வதற்கான பேச்சுக்களை நடத்திவருகின்றன. அடுத்தமாதமே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்.

இரண்டு கட்சிகளும் இந்தமாதம் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில்லை என்றும் - அடுத்தமாதமே கைச்சாத்திடுவதென்றும் முடிவுசெய்துள்ளன.

வருடத்தின் இறுதிமாதம் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொள்வது ஏற்றதல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கனடா தமிழ்க்கழக ஏற்பாட்டில்

# பொங்கல் புத்தாண்டை ஒட்டி கவிதைப் போட்டிகள்

கனடா தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் பொங்கல் புத்தாண்டு விழாவை முன்னிட்டு கவிதைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் - விடுதலை பொங்கட்டும், புத்தாண்டே வருக, வாழ்க வள்ளுவம் ஆகிய தலைப்புக்களில் கவிதைகளை எழுதி ஜனவரி 9 ஆம் திகதிக்கு முன்னர் **pcwa, 104 Hymus Road, Scarbough, Ontario, MIL ZC9** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

கவிதை - தாளின் ஒரு பகுதியில் மட்டுமே தெளிவாக எழுதப்படவேண்டும். போட்டிகள் வயது அடிப்படையில் 21 வயதுக்கு கீழும், 21 வயதுக்கு மேலுமாக இருபிரிவாக நடத்தப்படவுள்ளது. முதல் பிரிவினரின் கவிதை 20 வரிகளுக்கு குறையாமலும், 32 வரிகளுக்கு மேற்படாமலும், இரண்டாம் பிரிவின் கவிதை - 24 வரிகளுக்கு குறையாமலும் 40 வரிகளுக்கு மேற்படாமலும் அமைதல் வேண்டுமென அறிவிக்ககப்பட்டுள்ளது.

# இராணுவ ரோந்து நடவடிக்கையால் வவுனியாவில் மக்கள் அச்சம்!

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தினரின் சைக்கிள் ரோந்து அணி- மீண்டும் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் இராணுவத்தினரின் இந்த சைக்கிள் ரோந்து அணி மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது.

போர்நிறுத்த உடன்படிக்கைக்கு பின்னர் கடந்த நான்கு நாட்களாகப் படையினரின் இந்த அணி வவுனியாவில் பல கிராமங்களுக்குச் சென்று மக்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக மக்கள் தெரிவித்தனர்

# நெடுந்தீவு பிரதேச மட்டத்திலான விளையாட்டு விழாவுக்கு ஏற்பாடு!

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் பிரதேச மட்ட விளையாட்டு விழா - 2004 இற்கான நிகழ்வுகள் தொடர்பாக நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கான ஏற்பாட்டுக் கூட்டம், கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இப்போட்டிகள் அனைத்தும் 2004 ஜனவரி 03 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளன. இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் எதிர்வரும் 26 ஆம திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறும், அவ்வாறு ஒப்படைக்கத் தவறும கழகங்கள் - போட்டிகளில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்படும் எனவும், நெடுந்தீவு பதில் ஊர்காவற்துறைப் பகுதி விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரன் தெரிவித்தார்.

சகல குழு விளையாட்டு நிகழ்வுகள் தொடர்பான குலுக்கல் இலக்குகள் அனைத்தும் குறிப்பிட்ட நேரத்திற்குள் மைதானத்திற்கு வருகைதரும் கழகங்களுக்கிடையேயே தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஒரு விளையாட்டு வீரனுக்கு அவசியமாக நேரக்கட்டுப்பாடு இருக்கவேண்டும் எனவும், அதனைப் புரியவைக்கவே இவ்வாறு விதிமுறைகளையும் விதித்துள்ளதாகவும், அத்துடன் இம்முறை குழு விளையாட்டுகளிலும் மாவட்டரீதியில் இடங்களைப் பெற வேண்டும் எனவும், அதற்கு சகல கழக நிர்வாகத்தினரும் உதவிசெய்யவேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஆண், பெண், இருபாலாருக்குமான எல்லே, கபடி, கிரிக்கெட், கரப்பந்தாட்டம் ஆகியனவும் - பெண்களுக்கான வலைப்பந்தாட்டமும் ஆண்களுக்கான உதைப்பந்தாட்டமும், சுவட்டு, மைதான நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது!

## சர்வதேச அரசியல்...

கே.ரீ.கணேசலிங்கம்

**சதாம் கைது செய்யப்பட்ட பின்பு தாக்குதல்கள் தொடருகின்றன. தற்கொலைத் தாக்குதல்கள் ஒருபுறம் தீவிரமடைய மறுபுறத்தில் சுனி முஸ்லிம்களின் எதிர்ப்பு போராட்டங்கள் தொடர்கின்றது. அமெரிக்கப் படைகளுக்கு எதிராக மட்டுமன்றி, பிரித்தானியப் படைகளுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த மூன்று மாதங்களாக ஈராக்கிய இராணுவத்திற்கு ஊதியம் வழங்கவில்லை என்பதற்காக ஈராக்கிய இராணுவமே போராட்டத்தில் இறங்கியுள்ளது. எனவே, சதாம் மறைந்திருந்து தாக்குதலை வழிநடத்தியதாகக் கூறிய தகவல்கள் முடிவுக்கு வந்திருப்பதுடன், சதாம் கைதியானால் தாக்குதல்கள் நிற்கப்போவதில்லை என்பது வெளியாகிவிட்டது.**

# ஜனாதிபதி சதாம் ஹூசைனின் கைதும் "பாத்" கட்சியின் அரசியல் நகர்வும்...

முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைன் கைதுசெய்யப்பட்ட செய்தி கடந்த வாரம் பரபரப்பான அரசியல் நிகழ்வாக அமைந்திருந்தது. உலகம் முழுவதும் அதிர்ச்சியும், ஆர்வாரமும் போராட்டமுமாக கலந்த ஒரு கலக்கல் மனிதனாக சதாமை நோக்க முடிந்தது. சதாம் கைப்பற்றமுடியாத நபர் என்பதிலிருந்த நிலைமாறி கைதின் பின்னரும் கிறுக்கனாக நிமிரமுயலும் ஆட்சியாளனாக அலங்கரிக்கப்படுகின்றார். உறவினரும், குடும்பத்தவரும் ஏன் சுனி முஸ்லிம்களும் சதாமை ஆட்சியாளனுக்கு அப்பால் ஒரு தலைவனாகக் கருதும் நிலையே இன்றும் காணப்படுகிறது. இதனால், சதாமின் கைதையும் அதன் பின்னால் ஏற்பட்டுவரும் அரசியலையும் பரிசீலிப்போம்.

### சதாமின் கைது



சதாமின் மறைவான அரசியல் வாழ்வு இவ்வளவு பலவீனமானதாக அமையும் என உலகம் எதிர்பார்க்கவில்லை. குறிப்பாக வல்லாதிக்க சக்திகளை எதிர்த்தும், எந்த தலைமைகளும், அதன் மக்களும் ஒரு போதும் அப்படி எண்ணியிருக்கவில்லை. ஒரு சுரங்க அறைகளுள இரண்டு AK 47 ஐயும் குறிப்பிட்ட தொகையை உடைய அமெரிக்க நாணயங்களையும் கொண்டிருக்கும் சதாமாக மட்டும் சதாமை உலகம் கணிக்கவில்லை. அதுமட்டுமன்றி அத்தகைய இரண்டு துப்பாக்கிகளை கொண்டிருந்தபோதும், எதிரியை கண்டு தாக்காது தவிர்த்ததுடன் உங்களுடன் பேசவிரும்புகிறேன் என சதாம் கூறியதாக அமெரிக்க படை அதிகாரிகள் விடும் கதைகள் ஏற்கமுடியாததாகவே உள்ளன. இவைபோன்ற பல கதைகள் அமெரிக்கர்களின் அடுத்தகட்ட அரசியலுக்கு உலகத்தை தயாராக்குவதையே படம்பிடித்து காட்டுகின்றது. எல்லாமே அவர்களுடையது தான். அமெரிக்கர்களது ஊடகங்கள் கூறும் செய்திகளைக் கேட்கும் செவிகள் மட்டுமே எங்களுடையது. எனவே, அவர்கள் எந்தக் கதையை விட்டாலும் நாங்கள் கேட்போம், கேட்டுக்கொண்டே இருப்போம். ஹிட்லர், முசோலினி, இடிஅமீன் என்ற பெரிய பட்டியல் ஒன்று எங்களுக்கு முன்பு வைக்கப்பட்டது. அதனை நாம் தவிர்க்க முடியாது. ஏற்றும் கொண்டோம். ஆனால், இப்போது எமது சமகாலத்தில் ஆட்சி புரிந்த சதாம் அதேவரிசையில் மேற்குலகத்தவரால் நிறுத்தப்படும்போதே, கொடியவர்கள் யார், இனியவர்கள் யார் என்பது புலப்படுகிறது. சதாம் ஈராக் நாட்டின் ஜனாதிபதி. அமெரிக்க ஜனாதிபதி எப்படியோ, அப்படியான தலைவராகவே சதாம் ஆட்சி புரிந்தார். அமெரிக்காவின் பலவீனமான ஜனநாயகத்தினால் வீழ்த்திவிட்டு ஆட்சியைப் பிடித்த அமெரிக்க ஜனாதிபதியைவிட ஒருபடி மேல் சென்று தனது நாட்டு அரசியல் கலாசாரத்துக்கு ஏற்ப ஆயுத பலத்தால் ஆட்சியைப் பிடித்தவர் தான் சதாம். புஷ் ஜனநாயகத்தைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடித்தவர் சதாம். இதில் இருவருமே ஒரே தூரத்தைக் கொண்ட தலைவர்கள் என்பதை மறுக்கமுடியாது.

### பாத் கட்சிகளின் நிலை

சதாம் ஒரு இராணுவ ஆட்சியாளன் அமெரிக்காவை நன்கு தெரிந்த, விளங்கிக் கொண்ட ஆட்சியாளனான பலவீனங்களில் இருந்தே பலத்தைப் பிடித்த ஜனாதிபதி. எதிரி, நண்பன் யார் என்பதை விளங்கிக் கொள்ளாத ஆட்சியாளனாக இல்லை. அப்படிப்பட்ட இராணுவ வலிமையைக் கொண்ட ஈராக் மக்களின் இரு தசாப்த ஆட்சியாளன், எப்படி இலகுவாக அமெரிக்காவினால் கைது செய்யப்படக்கூடியவனாக இருந்தார் என்பதே எல்லோர் மத்தியிலும் உள்ள கேள்வியாகும். ஈராக்கில் சதாமுக்கு எதிரியாகவுள்ள குர்திஷ் அல்லது ஷியா முஸ்லிம் பிரிவினரால் காட்டிக்கொடுக்கப்பட்டிருக்கலாம். அவ்வாறான தகவல்களையும் அமெரிக்க அதிகாரிகள் பரப்பத் தவறவில்லை. அப்படியாயினும் சதாமின் படைகள் இல்லாமல் குறிப்பாக சதாமின் மெய்க்காவலாளர்கள் இல்லாமல் சதாம் எப்படி தனி மனிதரானார். இங்கேதான் பாத் கட்சியைப் பற்றிய சந்தேகம் தொடங்குகிறது. இது பற்றி அமெரிக்காவின் காங்கிரஸ் உறுப்பினரும் ஜனநாயகக் கட்சியின் தற்போதைய ஜனாதிபதி வேட்பாளரும் பாத் கட்சியைப் பற்றிய நடவடிக்கையில் ஈடுபடுவதே பொருத்தமானதென தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில், பாத் கட்சி சதாமுக்கு பதிலாக புதிய தலைமையைக் கண்டுபிடித்துவிட்டதுபோல் தெரிகிறது. சதாம் ஒரு காலத்து ஆட்சியாளனாகவே பாத் கட்சி கருதவாய்ப்புண்டு. அது மட்டுமன்றி சதாம் என்ற தனிமனிதனால் ஏற்பட்ட முரண்பாடுகளாகவே ஷியா மற்றும் குர்திஷ் மக்களது பிரச்சனைகள் முன்மொழியப்பட்டுவந்தது.

பாத் கட்சியை விட சதாமே அமெரிக்காவின் எதிரியாகவும், ஈரான், குவைத் போன்ற இஸ்லாமிய நாடுகளின் எதிரியாகவும், நோக்கப்படுகின்றது. இதால் சதாமை பாத் கட்சியில் இருந்தும் ஈராக்கில் இருந்தும் நீக்கப்பட்டால் பாத் கட்சி மீண்டும் ஈராக்கில் தழைத்தோங்கமுடியும். அதனால், சதாமைப் பாத் கட்சியினரே தனிமைப்படுத்தியிருக்கலாம்.



### தாக்குதலின் தொடர்ச்சி

இதனை மேலும் ஆதாரப்படுத்த இரண்டு அம்சங்களை நோக்கமுடியும். ஒன்று அமெரிக்கா சதாமை கைதுசெய்த பின்னர் இரசாயன ஆயுதங்களைத் தேடும் பணியை மட்டுப்படுத்தியுள்ளது. அவ்வாறான ஆயுதங்கள் இருப்பதாக சதாம் ஒப்புக்கொண்டால் கூட, சதாமுடன் இரசாயன ஆயுதங்களின் அழிவும் பூர்த்தியாகும். அதனால், சதாம் பிடிபடுவது பாத் கட்சிக்கும், ஈராக்குக்கும் லாபகரமானதாகவே உள்ளது.



இரண்டாவது, சதாம் கைதுசெய்யப்பட்ட பின்பு தாக்குதல்கள் தொடருகின்றது. தற்கொலைத் தாக்குதல்கள் ஒருபுறம் தீவிரமடைய மறுபுறத்தில் சுனி முஸ்லிம்களின் எதிர்ப்பு போராட்டங்கள் தொடர்கின்றது. அமெரிக்கப் படைகளுக்கு எதிராக மட்டுமன்றி பிரித்தானியப் படைகளுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்து மூன்று மாதங்களாக ஈராக்கிய இராணுவத்திற்கு ஊதியம் வழங்க வில்லை என்பதற்காக ஈராக்கிய இராணுவமே போராட்டத்தில் இறங்கியுள்ளது. எனவே, சதாம் மறைந்திருந்து தாக்குதலை வழிநடத்தியதாகக் கூறிய தகவல்கள் முடிவுக்கு வந்திருப்பதுடன், சதாம் கைதினால் தாக்குதல்கள் நிற்கப் போவதில்லை என்பது தெளிவாகிவிட்டது.

எனவே, சதாமின் கைது நடவடிக்கையில் 'அமெரிக்கர்கள் கூறுவதுபோன்று அல்லாமல் பாத் கட்சியின் அரசியலும் அதற்கு உதவியதாகக் கொள்ளலாம். அதனால், சதாம் பதுங்கியிருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கலாம். சதாம் அமெரிக்கரிடமே பிடிபடுவது ஈராக்கின் புதிய தலைமைக்கு வாய்ப்பாகவே அமையவுள்ளது. ஆனால், சதாம் பிற ஆட்சியாளர்களைப் போன்று நாட்டைவிட்டுத் தப்பியோடவில்லை. வேறுநாட்டில் தஞ்சம் கோரவில்லை. தனது மக்களோடு தானும் ஒருவனாக இருந்து கைதுசெய்யப்பட்டிருக்கிறார் என்பதே இங்கு விசேடமான அனுபவமாகவுள்ளது. சதாமை பல நாடுகள் மறைத்து வைத்திருக்க விரும்பின என்பதுடன் அதனால் அதிக அரசியல் ஆதாயங்களையும் அந்த அரசுகள் அடைந்திருக்க வாய்ப்பிருக்கலாம்.

### அமெரிக்காவின் அரசியல் நகர்வு

சதாமின் கைது மீண்டும் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் செல்வாக்கை உயர்த்திவருவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. அடுத்த ஜனாதிபதி தேர்தல் நெருங்குவதனால் சதாம் மிகப்பிரதான பிரச்சார சாதனமாக மாறுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. சதாமை ஈராக் நீதிமன்றத்தில் விசாரிப்பது மரணதண்டனை வழங்குவது என்பதெல்லாம் நாளாந்த செய்தியாகவே உள்ளது. உயர்பதவி தலைவர்கள் முதல் செயலாளர்கள்வரை மீளவும், மீளவும் தெரிவிக்கப்படும் தகவலாக உள்ளது. சதாமைக் கொடிய மனிதனாக - சர்வாதிகாரியாக, அசிங்கமான மனிதனாகச் சித்தரிப்பதையே பணியாக அமெரிக்க - பிரிட்டிஷ் தலைமைகள் மேற்கொண்டுவருகின்றன. சதாம் அவ்வாறு காட்டப்படுவதுடன், சதாமை உடனடியாகத் தண்டனை வழங்கக்கூடாத நிலையிலுமே அமெரிக்கத் தலைமைகள் ஈடுபட்டுவருகின்றன. சதாம் உடனடியாக மறைந்துபோனால் தமது அரசியலுக்கு எலும்புத்துண்டாகப் பயன்படுத்த முடியாதென்பதே அவர்களது பிரச்சினையாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் செயலாளரின் கண்ணீர் பயனற்றதொன்று என்பதையும் மறந்து, கருத்துக்கூறியுள்ளார். சதாமின் வீழ்ச்சிக்கு ஐ.நா. வின் செயலும் ஒரு பிரதான கா[illegible]ணியாகும். அப்படியான செயலுக்கு எந்த வெற்றிகரமான நடவடிக்கையும் எடுக்கமுடியாத நிலையில் சதாமின் மரணதண்டனை பற்றியோ, நீதி விசாரணை பற்றியோ குறிப்பிடுவதில் எந்த அர்த்தமும் கிடையாது. அதேபோன்று உலகத் தலைவர்களில் பிரான்ஸ், ஜேர்மன் அதிபர்கள் கருத்துக் கூறியிருப்பதும், சீனா, ரஷ்யத் தலைவர்கள் எதையும் பெரிதாக அலட்டிக் கொள்ளாததையும் காணமுடிகின்றது. சதாம் - பக்தாத் நகர்மீது தாக்குதலை அமெரிக்கா தாக்குதலை மேற்கொண்டபோது பின்வாங்கலைத் துரிதப்படுத்திவிட்டு, பின்னர் உலக நாடுகளில் சில நட்புநாடுகளின் தலைவர்களினால் தான் ஏமாற்றப்பட்டுவிட்டதாகக் குறிப்பிட்டது இங்கு நினைவுகூரத்தக்கது.

ஈராக்கைப் புனரமைப்பதில் சதாம் கைது செய்யப்பட்ட பின்னர் பல நாடுகள் முண்டியடித்துக்கொண்டு போட்டிபோடுகின்றன. அமெரிக்கா எதிர்பார்த்ததைவிட, அதிகநிதி கிடைத்திருப்பதாக வோஷிங்டன் அறிவி[illegible]துள்ளது. ரஷ்யா, சீனா, ஜப்பான், இத்தாலி பிரான்ஸ், ஜேர்மன் உட்பட, இதில் அதிக பங்கு பெறுகின்ற நாடுகளாக விரும்புகின்றன. அதற்கான பின்னணியாக சதாமின் கைதையே அந்நாடுகள் கருதுகின்றன. கைதினால் ஈராக்கின் ஸ்திரம், அமைதி சாத்தியப்படுமெனக் கருதுவதுடன், ஏற்கனவே அதிக பங்கு முதலீட்டைக் கொண்டிருக்கும் ரஷ்யா முழுமையான அக்கறையைச் செலுத்த விரும்புகின்றது. இதனை அரசியலாக்கும் அமெரிக்க ஆட்சியாளர்கள் ஈராக் மீதான போருக்கு அப்பால் அதனை நியாயப்படுத்துவதுடன், அதனை தேர்தலுக்கான பிரச்சாரமாகவும் பயன்படுத்தி வருகின்றன.

எனவே, சதாம் ஹூசைனின் சகாப்தம் ஏறக்குறைய முடிந்ததொன்றாகவே மாறியுள்ளது. சதாம் தற்கொலைக்கு ஒப்பான ஒரு வேலையையே செய்துமுடித்துள்ளார். இதைவிட சதாம் சதாமாக இருந்துகொண்டு அமெரிக்காவிடம் சரணடைந்திருக்கலாம். அதனால், பதவியில் ஈராக்கும் தக்கவைக்கப்பட்டிருக்கும். இதனை உலகத் தலைவர்கள் பாடமாகக் கொள்வார்கள் என்பதே, யதார்த்தமான விடயமாகும். ஏறக்குறைய லிபிய நாட்டுத் தலைவர் கேணல் கடாபி உடனடியாகவே சதாமின் அனுபவத்தைப் பெற்று செயற்பட ஆரம்பித்துவிட்டார். அது சரணடைந்தால் மட்டுமல்ல காலம் வரும்வரை காத்திருக்கும் இராஜதந்திரமாகக்கூட அமையலாம். மனித உரிமை, சிறுவர் உரிமை, பயங்கரவாதம் என்பதெல்லாம் - அமெரிக்கா உலகத்தை விரட்டுவதற்குக் தயார் செய்த இராஜதந்திரமான ஆயுதங்கள், அத்தகைய ஆயுதங்களைக் கொண்டு அமெரிக்கர்களைத் திரும்பத் தாக்க முயல்வதே சாத்தியமான, தந்திரமான அணுகுமுறையாகும். அதனைத் தவறும் உலகத் தலைவர்களுக்கு சதாமின் நிலை காத்திருக்கிறதென்பது தவிர்க்க முடியாதது.

## உலக நோக்கு

# பிலிப்பைன்ஸ் மண் சரிவில் இறந்தோர் தொகை அதிகரிப்பு

பிலிப்பைன்ஸின் மத்திய பகுதியில் பலத்த மழையின் பின் ஏற்பட்ட நிலச்சரிவில் 200 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், இதுவரை 77 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. சீரற்ற காலநிலையும் பிரயாணம் செய்ய முடியாத பாதைகளுமே பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உடனடியாக மீட்புப் பணிகளை நடத்த முடியாமைக்குக் காரணமாக அமைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரங்கள் அதிக அளவில் வெட்டப்பட்டிருந்ததால் மண் இறுக்கம் இன்றி இருந்ததே மண் சரிவுக்குக் காரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் இரும்புக் கம்பிகளின் உதவியுடன் புதையுண்டவர்களைத் தேடி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காப்பாற்றப்பட்ட மக்களில் சிலர் தமது உறவினர்கள் மரணமடைந்துள்ளதாகவும் தம்மைக் காப்பாற்றத் தேவையில்லையெனவும் கூறியுள்ளனர்.

1991 ஆம் ஆண்டு இந்தப் பிரதேசத்தில் 'ஓர்மொக்' என்ற நகரில் நிகழ்ந்த மண் சரிவில் 5000 இற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்திருந்தனர். காடுகள் சட்டவிரோதமாக அழிக்கப்பட்டமையே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கானுக்கான புதிய அமெரிக்கத் தளபதி பாதுகாப்பில் மாற்றங்கள் செய்யத் திட்டம்!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் புதிதாக நியமிக்கப்பட்ட அமெரிக்கப் படைத் தளபதி பார்னோ, தலிபான் போராளிகளின் தாக்குதல்களுக்குட்படும் பிரதேசங்களில் பாதுகாப்பில் மாற்றங்களைச் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் தலிபான் போராளிகளால் தொடரும் வன்முறையால் சர்வதேச உதவி நிறுவனங்கள் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. அடுத்த ஆண்டில் ஆப்கானிஸ்தானில நடத்தப்படவுள்ள தேர்தல்களுக்கும் புதிய மாற்றங்கள் உதவலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆப்கானிஸ்தானில் புதிய அரசியல் யாப்பொன்றினை உருவாக்குவதற்கு அமைக்கப்பட்ட குழுவினரிடையே முக்கிய அரசியல் யாப்புத் தொடர்பாக கருத்துக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்குழுவினர் ஜனாதிபதி அமைப்பு முறை ஒன்றிற்கு மிகுந்த ஆதரவைக் கொடுத்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ரஷ்யாவுக்கு எதிராக போரிட்ட முகைதீன் போராளிகள, ஜனாதிபதி அமைப்பு முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். பிரதமர் தலைமையிலான அரசையே தாங்கள் விரும்புவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பிரிவினைவாதிகள் மீதான தாக்குதல்களை இரண்டு நாட்களுக்கு பூட்டான் நிறுத்தியது!

பூட்டானைத் தளமாகப் பயன்படுத்தும் இந்தியப் பிரிவினைவாதிகளுக்கு எதிரான தாக்குதல்களை இரு நாட்களுக்கு நிறுத்தியுள்ளதாகவும் இதன மூலம் தம்மை ஒன்றிணைத்து பலப்படுத்த உள்ளதாகவும் பூட்டான் படையினர் தெரிவித்துள்ளனர். பிரிவினைவாதிகளுக்கெதிரான தாக்குதல்கள் முற்றாக நிறுத்தப்படவில்லை எனவும் இத்தாக்குதலின் இரண்டாவது கட்டம் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய பிரிவினைவாதிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களில் இதுவரை 100 போரா்ளிகள் கொல்லப்பட்டுள்ளதுடன் நூற்றுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

நூறுக்கு மேற்பட்ட இந்தியப் பிரிவினைவாதிகள் பூட்டானின் காட்டுப் பகுதிக்குள் தப்பி ஓடியுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக மீண்டும் போராட வேண்டியுள்ளதாகவும் பூட்டான் படையினர் தெரிவித்தனர்.

பூட்டானிய படையினரால் கைது செய்யப்பட்ட இருபதுக்கு மேற்பட்ட பிரிவினைவாதத் தலைவர்கள் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இனிக் கைது செய்யப்படுபவர்கள் விரைவில் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள் எனவும் பூட்டான் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## நக்கீரன் கோபால் விடுதலை

# தடைசெய்யக் கோரும் மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரிப்பு!

நக்கீரன் கோபால் பிணையில் விடுதலை செய்யப்பட்டதை ரத்துச் செய்யுமாறு கோரி தமிழக அரசு தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

'பொடா' வழக்கில் கைது செய்யப்பட்ட நக்கீரன் ஆசிரியர் கோபால், சென்னை உயர் நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் காலை பிணையில் விடுதலை செய்யப்பட்டார். ஜெயலலிதா அரசின் கொடுங்கோல் ஆட்சிக்குக் கிடைத்துள்ள முதல் அடியே தனது விடுதலை என்று அவர் கூறினார்.

பின்னர் தி.மு.க. தலைவர் கருணாநிதியை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து தனது நன்றியை அவர் தெரிவித்துக்கொண்டார்.

இந்த நிலையில் கோபாலுக்கு வழங்கப்பட்ட பிணையை ரத்துச் செய்யக்கோரி தமிழக அரசின் சார்பில் அவசர அவசரமாக நேற்று முன்தினம் மாலை உச்ச நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டது. இந்த மனுவைப் பரிசீலித்த தலைமை நீதிபதி வி.என்.காரே, லோஹத்தே, பிரஜேஷ்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு மனுவை அனுப்பினார்.

மனுவைப் பரிசீலித்த நீதிபதிகள், கோபாலுக்கு வழங்கப்பட்ட பிணையை ரத்துச்செய்ய மறுத்து விட்டனர். இது தொடர்பாக விளக்கமளிக்குமாறு கோபாலுக்கு அழைப்பு அனுப்ப உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு குளிர் கால விடுமுறைக்குப் பின்னர் விசாரிக்கப்படும் என அறிவித்தனர்.

இதேவேளை - நெடுமாறன் உள்ளிட்ட நால்வர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மனுத் தாக்கல் செய்திருந்ததும், அதை உச்ச நீதிமன்றம் நிராகரித்ததோடு தமிழக அரசுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# கூட்டணியிலிருந்து தி.மு.க வெளியேற நாங்கள் காரணமாக இருக்கவில்லை!

## பா.ஜ.க. செயலாளர் இல.கணேசன் தெரிவிப்பு

(சென்னை)

தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலக தமிழக பாரதீய ஜனதாக்கட்சி காரணமல்ல, அவர்களாகவே வெளியேறியுள்ளனர் என்று பாரதீய ஜனதாக்கட்சியின் அகில இந்திய செயலாளர் இல.கணேசன் கூறியுள்ளார்.

கடந்த நான்கு ஆண்டுகால பா.ஜ.க. கூட்டணியிலிருந்து தாங்கள் விலக நாங்கள்தான் காரணம் என்று தி.மு.க கூறுவதை ஏற்கமுடியாது. கூட்டணி தர்மத்தை நாங்கள் என்றைக்குமே மீறியதில்லை. தமிழகத்தில் முக்கிய கட்சியான தி.மு.கவுடன் கூட்டணி நீடிப்பதையே நாங்கள் எப்போதும் விரும்பினோம்.

தி.மு.கவின் மறியல் போராட்டம் குறித்து பா.ஜ.க தலைவர்கள் சில கருத்துக்கள் கூறியது உண்மைதான். ஆனால் அதை தி.மு.க ஆக்கபூர்வமாக எடுத்துக்கொண்டிருக்கவேண்டும். மறியல் குறித்துக் கூறியிருந்தாலும் கூட தி.மு.கவுடன் கூட்டணி நீடிக்கவேண்டும் என்றே நாங்கள் விரும்பினோம். ஆனால், அதை தி.மு.க நினைத்துப் பார்க்கவில்லை.

கூட்டணியை விட்டுவிலகவேண்டும் என்று அவர்கள் முடிவுசெய்து விட்டார்கள். விலகியும் விட்டார்கள். அதற்காக இல்லாத காரணத்தையெல்லாம் தற்போது கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

எப்போதுமே நாங்கள் அ.தி.மு.கவுடன் கூட்டணி வைக்க வேண்டும் என்று கருதி செயற்பட்டதில்லை. அ.தி.மு.க.வுடன் கூட்டணி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று தெரிவித்தார்.

இந்த நிலையில், பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய துணைப்பிரதமர் அத்வானி கூட்டணியிலிருந்து தி.மு.க விலகியது அவர்களது சொந்தமுடிவு, இது குறித்து பாதுகாப்பு அமைச்சரும், தேசிய ஜனநாயக் கூட்டணி அமைப்பாளருமான ஜோர்ஜ் பெர்ணான்டசுடன் பேசினேன். தி.மு.கவின் இந்த முடிவால் கூட்டணிக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று கூறினார்.

இந்திய கம்யூனிஸ்ட் ,மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட்,புதிய தமிழகம், இந்திய தேசியலீக் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் தி.மு.கவின் முடிவை வரவேற்றுள்ளனர்.

# ம.தி.மு.கவின் அடுத்த நகர்வு என்ன? தமிழக அரசியல் வட்டாரத்தில் கேள்வி!

தேசிய ஜனநாயகக் கூட்டணியிருந்து விலகும் தி.மு.கவின் முடிவு ம.தி.மு.கவுக்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து ம.தி.மு.க என்ன முடிவெடுக்கப் போகிறது என்று தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்தும், மத்திய அமைச்சரவையிலிருந்தும் தி.மு.க விலகியுள்ளது. இதை தொடர்ந்து சமீபகாலமாக தி.மு.கவுடன் மிகநெருங்கிய உறவை ஏற்படுத்திக்கொண்டுள்ள ம.தி.மு.க என்ன முடிவை எடுக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தி.மு.க. தலைவர் கருணாநிதிதான், இனி என் தலைவர் அவரை என் வாழ்நாளில் இனி எதிர்க்கவே மாட்டேன் என்று சில மாதங்களுக்கு முன்பு ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ கூறியிருந்தார்.

மேலும் வை.கோவின் விடுதலை தொடர்பாக, தி.மு.க அடிக்கடி மத்திய அரசையும், பிரதமரையும் வலியுறுத்திவந்துள்ளது. பொடா சட்டத்தையும் ரத்துச்செய்யும்படி அது தீவிரமாக வலியுறுத்திவருகிறது.

வை.கோவுக்காக தீவிரமாக குரல் கொடுத்துவரும் தி.மு.க, தற்போது எடுத்துள்ள முடிவை ம.தி.முகவும் கண்டிப்பாக பின்பற்றியாகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் தி.மு.கவை பின்பற்றி தாங்களும் விலகினால் வை.கோவின் விடுதலையில் சிக்கல் நீடிக்கலாம், அரசியல் எதிர்காலம் கேள்விக் குறியாகலாம் என்று ம.தி.மு.கவின் முன்னணித் தலைவர்கள் சிலர் அஞ்சுவதாகக் கூறப்படுகிறது.

இருப்பினும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அ.தி.மு.க சேர்ந்தால் கூட்டணியைவிட்டு கண்டிப்பாக வெளியேறவேண்டிய சூழ்நிலை ம.தி.மு.கவுக்கு ஏற்படும். அதற்கு இப்போதே, தி.மு.கவுடன் சென்றுவிடுவது மேல் என்று சில ம.தி.மு.க தலைவர்கள் கூறியுள்ளனர்.

ஆனால் தி.மு.கவுடன் சேர்ந்து வருவதிலும் ம.தி.மு.கவுக்கு சிக்கல் உள்ளது. காங்கிரஸ் கட்சியுடன்



தி.மு.க கூட்டணி ஏற்படுத்தினால், விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளரான ம.தி.மு.கவை காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ளுமா என்று சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வை.கோ என்ன முடிவு எடுக்கப் போகிறார் என்பதில் பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இருப்பினும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் ம.தி.மு.க நீடிக்கப்போவது -

இன்னும் சில மணி நேரங்களுக்கு மட்டுமே என்று தி.மு.க வட்டாரத்தில் உறுதியாகக் கூறப்படுகிறது.

# போதைப் பொருட்களை கடத்திச் சென்ற அல்கொய்டாவின் இரு கப்பல்கள் சிக்கின

## அமெரிக்க கடற்படை அறிவிப்பு



அரேபியக் கடலின் வட பகுதியில் சட்டவிரோதமாக போதைப் பொருட்களைக் கடத்திய - அல்கொய்டா போராளிகளுடன் தொடர்புடைய இரு அரேபியக் கப்பல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கப்பலின் 21 சிப்பந்திகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அமெரிக்கக் கடற்படை தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட கப்பலிலுள்ள போதைப்பொருட்களின் பெறுமதி மூன்று மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடையதெனத் தெரிவிக்கப்படுகிறது.

பிலிப்பைன்ஸ் கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த யு.எஸ். எஸ் என்ற அமெரிக்கக் கடற்படைக் கப்பலே இந்த இரண்டு கப்பல்களையும் கைப்பறியதாகக் கூறப்படுகிறது. இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

அல்கொய்டா இயக்கத்துக்கான நிதி உதவிகளை கட்டுப்படுத்த அமெரிக்கா நடவடிக்கை எடுத்த பின்னர் கப்பல்கள் கைப்பற்றப்பட்ட இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

கைது செய்யப்பட்ட கப்பல் சிப்பந்திகளில் மூவருக்கு அல் கொய்டா அமைப்புடன் தொடர்புள்ளதெனக் கூறப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக அமெரிக்க கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், இரு கப்பல்களும் கடற்படையின் ராடர் கருவிகளின் மூலம் அறியப்பட்டிருந்தும் அவற்றைக் கண்டுபிடிப்பதற்கு 48 மணித்தியாலங்கள் எடுத்ததாகவும், போதைப் பொருட்களை கடலில் எறிந்துவிட்டு கப்பல் தப்பித்துக்கொள்ள முயன்றதாகவும் தெரிவித்தார்.

# இந்திய அமைச்சரவை மாற்றியமைக்கப்படும்

மத்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.க விலகியதையடுத்து அமைச்சரவை மாற்றியமைக்கப்படும் என்று பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்.

அமைச்சரவையில் இருந்து விலகுவது எனவும், கொள்கையடிப்படையில் தேசிய ஜனநாய்கக் கூட்டணிக்கு ஆதரவு தருவது எனவும் தி.மு.க நேற்று அறிவித்திருந்தது.

இதனையடுத்து தி.மு.க முடிவால் மத்திய அமைச்சரவை மாற்றியமைக்கப்படுமா? திரிணமூல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜிக்கு அமைச்சுப் பொறுப்பு தரப்படுமா? என்று நிருபர்கள் கேட்டதற்கு தி.மு.க அமைச்சர்களின் ராஜினாமாக் கடிதம் கிடைத்ததும் அதற்கு சாத்தியமுள்ளது என்று பதில் கூறினார் வாஜ்பாய்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்றது உண்மைதான்' என்று கூறியபடி பெருத்த கொட்டாவி ஒன்றையும் விட்டார் மணியத்தார்.

'என்ன பழமொழி கிழமொழியெல்லாம் கொட்டாவியோடை வருகுது' என்றபடி அருகே வந்தார் கனகர்.

'புலிகளால தனது உயிருக்கு ஆபத்து என்று நாலஞ்சு நாளைக்கு முன்பு இப்ப ஆனந்தமில்லாமல் போயிருக்கும் சங்கரியார் புலம்பியிருந்தாரெல்லே...'

'ஓமோம்... அதுக்கு இப்ப என்ன?'

'நேற்றுப் பேப்பரிலை - சங்கரியாரைக் கொல்லவந்து காத்திருந்த ஒருவர்... அதுவும் கூட்டணித் தலைமையகத்துக்குள்ளேயே காத்திருந்த நபர் அங்கையிருந்து திரும்பிப்போய்விட்டாராம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளார்கள் எண்டெல்லே செய்தி வந்திருக்கு..'

'கடவுளே... சங்கரியார் தப்பீட்டார்... பாவம் கடைக்காலத்திலை அவருக்கு இப்பிடி ஒரு ஆபத்தோ...'

'விசர்க்கதை கதைக்கிறாய்... ஆறுமாதமாய் காத்திருந்தவன் பாதுகாப்புப் பிரிவு அச்சுறுத்தினதோடை அரைநிமிசத்திலை ஆளைக்காணேல்லை என்றால்... ஆரை நம்பச் சொல்லினம்'

'ஓமோம் கதைவிடுகினம்... எங்களையென்ன காதிலை பூச்சுத்திக் கொண்டு திரியினம் எண்டு நினைக்கினமே... அவை சொல்லுறதையெல்லாம் நம்புறத்திற்கு...?'

'நீயேன் கொதிக்கிறாய்... உதெல்லாம் ஒரு 'ஸ்ரண்ட்' வேலை தேர்தல் வரமுன்பே அனுதாப வாக்குக்கு வலைவீசும் வேலையெண்டு விளங்கேல்லையே... கனகு...'

'சரியாய்ச் சொன்னாய்... நானுமெல்லே உண்மையெண்டு நம்பி அனுதாபப்பட்டிட்டன் மணியம்...'

'கண்டதும் பொய்... கேட்டதும் பொய்... தீர விசாரித்து அறிவதே மெய்...' என்றார் தேத்தணிக்கடையில் நின்ற பண்டிதர். தெருவாசி

# ஏறாவூரில் கிணற்றிலிருந்து இளம்பெண்ணின் சடலம் மீட்பு!

(மட்டக்களப்பு)

ஏறாவூர் செங்கலடிப்பகுதியில் உள்ள கிணற்றிலிருந்து இளம் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

செங்கலடி ஆண்டான் குளத்தைச் சேர்ந்த காத்தலிங்கம் நிசாந்தினி (வயது - 17) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர் தனது உறவினர் வீட்டிற்குச் செல்வதாகக்கூறி கடந்த வியாழக்கிழமை வீட்டிலிருந்து சென்றுள்ளார். எனினும், வீடு திரும்பாத அவரைப் பெற்றோரும், உறவினர்களும் கடந்த வெள்ளிக்கிழமை பல இடங்களுக்கும் சென்று தேடியும் அவரைக் கண்டுபிடிக்கமுடியவில்லை.

அன்று மாலை ஏறாவூர் காளி கோவிலடியில் உள்ள வயற்காணியிலுள்ள கிணற்றில் தமது மகள் சடலமாகக் கிடப்பதைக் கண்ட பெற்றோர், அவரது உடலை மீட்டு செங்கலடி வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இந்தச் சடலத்தை சட்ட மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய வைத்தியர் சுகுமார், இவரது இறப்பு ஒரு கொலை எனத் தீர்ப்பளித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றபோதிலும், இதுவரையில் எவரும் கைதுசெய்யப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

## பதவிக்காலத்தை ஒருவருடம்...

இதன்படி 2000 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பொறுப்பேற்ற சந்திரிகா 2005 ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் திகதி தனது பதவியிலிருந்து விலகி 2006 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடாத்த வேண்டும்.

ஆனால், தற்போது நடந்த இரகசிய கலந்துரையாடலின்படி தீர்மானம் எடுக்கப்பட்டால் 2006 ஆம் ஆண்டும் ஜனாதிபதி சந்திரிகா பதவியிலிருப்பதுடன் 2007 ஆம் ஆண்டே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்.

இதேவேளை, இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளரான ஜனதாஸ பீரிஸிடம் கேட்டபோது - தனக்கு இதுபற்றி எதுவும் தெரியாதெனக் கூறினார்.

ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திலிருந்து மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையில் ஜனாதிபதியால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பின்படி ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் ஒருவர், இரண்டு தடவைக்கு மேல் அந்தப் பதவியில் இருக்கமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று முதல் பெறலாம்

நவீன நிதிக் கணக்கீட்டுக் கோட்பாடுகள்

(3 ஆம் பதிப்பு)




ஆசிரியர் : D.Sam

வெளியீடு : DMI

குறிப்புக்கள்:

❖ இலங்கையிலேயே முதல் தடவையாக சீடி ரம் (CD - ROM) உடன் வெளிவரும் நூல்,

❖ DMI, பூபாலசிங்கம் புத்தகசாலை (யாழ்.கொழும்பு) ஸ்ரீலங்கா புத்தகசாலை (யாழ். கொழும்பு) JEYA BOOK CENTER (கொழும்பு) இல் பெற்றுக்கொள்ளலாம்.

(1911)

# அரசியல் மாற்றங்களினை ஏற்படுத்த சந்திரிகா-ரணில் ஒன்றுபடவேண்டும்

## இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவிப்பு

ஜனாதிபதியும், பிரதமரும் அரசியல் முறைகளில் மாற்றங்களை கொண்டுவர - ஒன்றுபட்டுச் செயற்படாவிடில் நாட்டின் எதிர்காலம் இருண்டு போய்விடும் என அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை உப தபாலதிபர்களின் இருபதாவது வருடாந்த சம்மேளனத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டில் நிலவும் அரசியல்நெருக்குவாரங்களால் அமைச்சர்களின் கடமைகளை நிறைவேற்றப் போதிய சந்தர்ப்பம் ஏற்படாமல்போயுள்ளது.

நாட்டின் நலன்கருதி இரு தலைவர்களும் இணைந்து செயற்பட வேண்டும். ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்படாவிட்டால் நாடு மீண்டும் அழிவு நிலையை நோக்கிச்செல்லும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வத்தளையில் கலவரத்தை அடுத்து நேற்று மாலை முதல் ஊரடங்கு

வத்தளை ஹெப்பிட்டிக்கொடப் பகுதியில் சிங்கள - முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்ட கலவரத்தையடுத்து அப்பகுதியில் ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஹெப்பிட்டிகொடப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் நடந்த மோதலின் பின்னர் ஏற்பட்ட கலவரத்தில் கைக்குண்டு வீசப்பட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இறந்தவர்களின் மரணக்கிரியைகள் நேற்று இடம்பெற்ற பின்னர், மாலை 5.30 மணிக்கு அப்பகுதிக்கு வந்த இளைஞர் குழுவொன்று வீடுகள் சிலவற்றை தாக்கிச் சேதப்படுத்தியுள்ளதுடன், பள்ளிவாசல் ஒன்றையும் தாக்கியுள்ளனர். அத்துடன் சில பொதுமக்களையும் தாக்கினர்.

இதனையறிந்த பொலிஸார் அப்பகுதிக்கு விரைந்து வந்ததுடன், அப்பகுதியில் சிங்கள - முஸ்லிம் மக்கள் மத்தியில் கலகம் ஏற்படாமல் தடுப்பதற்காக ஊரடங்கு உத்தரவையும் பிறப்பித்துள்ளனர்.

அத்துடன், கலகத்தில் ஈடுபட்ட இளைஞர்களையும் பொலிஸார் தேடிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆயுதத் தேவை...

மற்றும் உபகரணங்களது நீண்ட பட்டியலை ஜனாதிபதியுடனான நாளைய சந்திப்பில் வழங்கத் தயாராகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உடனடியான தேவைகள் குறித்து - கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்துடன் முப்படைத் தளபதிகளும் மேலெழுந்தவாரியாகக் கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதியிடம் வழங்கவுள்ள இந்த நீண்ட பட்டியல் அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் தயாரிக்கப்பட்டதாகும்.

இதேவேளை, விடுதலைப் புலிகளுடனான ஒப்பந்தத்தின் பின்னர் அரசாங்கம் - முப்படைகளது தேவைகள் குறித்து எதுவித அக்கறையும் செலுத்தவில்லை. அத்துடன் அவர்களுக்கான ஆயுததளபாடங்கள் முடிவடைந்த நிலையிலும் அதனை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் படையினர் மிகவும் பலவீனமான நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளனர் என ஜனாதிபதி குற்றம்சாட்டியிருந்தார்.

மேலும் பாதுகாப்பு அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட நிதியை அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம் என அரசாங்கம் எண்ணியிருந்தது. இதற்குக் காரணம் புலிகளுடனான சமாதான முயற்சியாகும். இது ஒரு தவறான முடிவென்பது தற்போதைய நிலைமைகள் மூலம் தெரியவந்துள்ளது.

தற்போது, ஏற்பட்டுள்ள நிலமைகளால் படைச்சமநிலை குழம்பியுள்ளது. இது விடுதலைப் புலிகளுக்கே சாதகமாக உள்ளது. எனவே படைகளுக்கான உடனடித் தேவைகள் குறித்து அவசரமாக ஆராயவேண்டியுள்ளதென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாதுகாப்பு அமைசசினை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் முப்படைத் தளபதிகளையும், அவர்களது படைகளுக்கான தேவைகள் குறித்து சந்திக்கவிருப்பது இதுதான் முதற்தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்றக்...

படுவது உறுதியான அரசியல் நிலையாகும். எனவே, நாடாளுமன்றைக் கலைத்து தேர்தல் ஒன்றின் மூலம் இந்த நாட்டின் தலைவிதியை மாற்றியமைப்போம் என, ஜே.வி.பியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# வட-கிழக்கு ஆசிரியர் ஆட்சேர்ப்பு பரீட்சைக்கு வர்த்தக பாடத்தினரும் விண்ணப்பிக்கலாம்!

## தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்க்கும் போட்டிப்பரீட்சைக்கு வர்த்தக பாடம் கற்ற மாணவர்களும் விண்ணப்பிக்கமுடியுமென, தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து கடந்த வாரம் பொதுச்செயலாளரும், சங்கத்தின் பிரதிநிதிகளும், உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கைச் சந்தித்தபோதே, அமைச்சர் இதற்கு இணக்கம் தெரிவித்தார்.

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் ஆயிரம் தமிழ்மொழிமூல பாடநெறிகளுக்கான ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், ஆரம்பக்கல்வி ஆகிய பாடங்களுக்கு மட்டுமே விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

எனினும், தற்போது உடற்கல்வி விவசாயம், வர்த்தகம், தொழில் நுட்பம், சித்திரம், சங்கீதம், மனைப் பொருளியல், கடல்வளம் முதலான பாடங்களுக்கும் ஆசிரியர்கள் ஆட்சேர்க்கப்படவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை அனுப்பவேண்டியோரின் தகைமைகள் குறித்து இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படவுள்ளது.

இதேவேளை, போட்டிப் பரீட்சை வடக்கு - கிழக்குப் பிரதேசத்திலும் நடைபெறவுள்ளதாகவும், தொண்டராசிரியர்கள், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் முதலானோரை ஆசிரிய சேவையில் உள்வாங்குவதற்கான வயதெல்லை 45 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பிரதான தமிழ்க் ...

என்ற அடிப்படையிலேயே நாம் செயற்படவுள்ளோம்.

இதனடிப்படையில் மலையக மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாகக் ஏற்றுக்கொண்டு செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலான கட்சிகள் அனைத்தும் ஒன்று திரண்டு நாடாளுமன்றில் தமிழரின் உரிமையை வலியுறுத்தி பேரினவாத சக்திகளுக்கு எதிராகக் குரல்கொடுக்கவுள்ளோம்.

இதற்கான சகல ஆயத்தத்துடனும் மேல்மாகாண மக்கள் முன்னணி உள்ளது என்றார்.

## மலிக் - மனோ...

கடைசியாக நடந்த ஜனாதிபதியுடனான கூட்டத்திலும் ஜே.வி.பியினர், இரு செயலாளர்கள் கூட்டணி தொடர்பாக இறுதி முடிவெடுப்பதற்கு நேரத்தினை ஜனாதிபதியிடம் கேட்டுள்ளனர்.

இதேவேளை, சுதந்திரக்கட்சியின் செயலாளர் இனிவரவுள்ள மாகாணசபைத் தேர்தல் தொடர்பான வேட்பாளர்களை தயார்செய்யும்நிலையில் உள்ளதாக சுதந்திரக் கட்சியினர் தெரிவித்த அதேவேளை, இவ்வாறு நடக்கும் தேர்தலை வைத்துக் கொண்டு இரு கட்சிக்கும் இடையிலான கூட்டணியை முடிவுசெய்யக் கூடாதென ஜே.வி.பியினர் தெரிவித்துள்ளனர்.

JAFFNA TECHNICAL INSTITUTE
JAFFNA SRILANKA

REGD NO: 15251 T.P - 222 3335

தொழிற் பயிற்சிகள்

☆ RADIO, T.V AND VIDEO DECK REPAIRING
சகலஇன றேடியோ, ரீ.வீ, டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, UPS, Printer, Scanner என்பன திருத்தும் முறை. ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

☆ MOTOR REWINDING AND ELECTRICAL WIRING.
சகல இன மோட்டார், (F)பான், ரான்ஸ்போமர்கள் றிவைன்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 7 மாதங்கள்)

☆ MOTOR CYCLE MECHANISAM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)

☆ AIR CONDITIONING AND REFRIGERATION
சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 7 மாதங்கள்)

☆ CITY AND GUILDS OF LONDON EXAM
1. POWER 2. ELECTRONICS

புதிய பயிற்சிகள் ஆரம்பம்

05.01.2004 - (கிழமை நாட்களில்)
03.01.2004 - (சனி, ஞாயிறு நாட்களில்)

- மேலதிக விபரங்களுக்கு நேரில் -

367, நாவலர் வீதி,
இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

- DIRECTOR
No - 07, Palaly Road,
Jaffna.

(சி-1914)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.